விலை: 60.00
பக்கங்கள் : 20
website : www.valampurii.lk
viber : 076 636 3378
E-mail: valampurii@yahoo.com
Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
## சங்குநாதம்

கல்யாண மாலை
சர்வதேச இலவச திருமண சேவை

T.P: 021 720 1005
இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
kalyanamalai.jaffna@gmail.com
4000/= மட்டுமே

சங்கு 24
ஒலி 181 வள்ளுவர் ஆண்டு 2054 ஆனி 03 ஞாயிற்றுக்கிழமை (18.06.2023) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829


### குருந்தூர்மலை விவகாரம்
# மகாநாயக்கர்களின் ஆலோசனை அவசியம்
### பெரமுன செயலாளர் சாகர



- வடக்குக் கிழக்கு தொல்பொருட்களை பாது காக்க ஜனாதிபதியிடம் வலியுறுத்தினோம்.
- அரசியலுக்காக தொல்பொருள் விவகாரத்தை பயன்படுத்த முடியாது.

தொல்பொருள் திணைக்கள பணிப்பாளர் பதவி விலகல் தொடர்பில் ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவிக்கும்போதே மேற்கண்ட 19

### நயினைத் தாய்க்கு நாளை கொடியேற்றம்
# ஆலய வீதியில் வலம் வந்த மூன்று நாகங்கள்



(நயினாதீவு)
நயினாதீவு நாகபூசணி அம்மன் ஆலய மகோற்சவம் நாளை கொடியேற் றத்துடன் ஆரம்பமாகவுள்ள 19

### குழுக்களிடையே கைகலப்பு
# மன்னாரில் குடும்பஸ்தர் வெட்டிப் படுகொலை

(மன்னார்)
மன்னாரில் இளம் குடும் பஸ்தர் ஒருவர் வெட்டிப் படு கொலை செய்யப்பட்டுள்ளார்.
மன்னார் - நானாட் டான் பிரதேச செய 19

### 40 ரூபாயினால்
# கோதுமை மாவின் விலை அதிகரிப்பு

(கொழும்பு)
இறக்குமதி செய்யப்படும் கோதுமை மாவின் விலை 40 ரூபாயினால் அதிகரிக்கப்பட்டுள்ளதாக அகில இலங்கை பேக்கரி உரிமையாளர் சங்கம் தெரிவித்துள்ளது. 19

### அதிகளவு கடன் தொல்லை
# முல்லை கைவேலியில் இளைஞன் உயிர்மாய்ப்பு

(முல்லைத்தீவு)
அதிகளவு கடன் தொல்லை காரணமாக முல் லைத்தீவு கைவேலிப் பகுதியில் இளைஞன் ஒருவர் விபரீத முடிவெடுத்து உயிரிழந்துள்ளார்.
நேற்று மாலை இச்சம்பவம் இடம்பெற் றுள்ளது. 19

### தனிச்சிங்கள சட்டத்தினால்
# அதிகளவான பாதிப்பை நாடு எதிர்கொண்டது
### தந்தையின் தவறை ஒப்புக்கொண்ட மகள்



(கொழும்பு)
தனது தந்தை கொண்டு வந்த தனிச்சிங்களச் சட்டத் தினால் நாடு பெரும் பாதிப்பை எதிர்கொண்டது என்பதை ஏற்றுக் கொள்வதாக முன்னாள் பிரதமர் எஸ்.டபிள்யூ. ஆர்.டி.பண்டாரநாயக்கவின் மகள் சுனேத்திரா பண்டார நாயக்க தெரிவித்துள்ளார். (19ஆம் பக்கம் பார்க்க)

# நாய்களுக்கு வைரஸ் மக்களுக்கு எச்சரிக்கை

(கொழும்பு)
அண்மைக்காலமாக நாய் களுக்கு ஒருவிதமான வைரஸ் காய்ச்சல் பரவி வருகின்றது.
இது தொடர்பில் பொது மக்கள் எச்சரிக்கையாக இருக்குமாறு கால்நடை வைத்தியர் டாக்டர் உபுல் சாகர திலக்க தெரிவித்துள்ளார்.
இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்,
கண்டி, நுவரெலியா, மாத் தளை, கம்பளை, ஹட்டன், பேரா 19

# பொருளாதாரத்தை ஸ்திரப்படுத்த இறக்குமதிக் கட்டுப்பாடு அவசியம்
### இந்தியாவுக்கான இலங்கைத் தூதுவர்



(கொழும்பு)
இந்த வருட இறுதிக்குள் இலங்கை தனது பொருளா தார நிலையை ஸ்திரப்படுத்து வதும் இறக்குமதிகள் மீதான கட்டுப்பாடுகளை தளர்த்து வதும் அவசியம் என இந்தியாவிற்கான 19

# இலங்கை குடும்பமொன்றின் மாதாந்த செலவு ரூ.76,124
### ஐ.நா அறிக்கையில் சுட்டிக்காட்டு

(கொழும்பு)
ஐக்கிய நாடுகளின் உணவு மற்றும் விவசாய ஸ்தாபனத் தின் 2023ஆம் ஆண்டுக்கான சமீபத்திய அறிக்கைகளின்படி, இலங்கையில் குடும்பமொன் றின் மாதாந்தச் செலவு இவ் வருடம் 76,124 ரூபாயாக அதி கரித்துள்ளதாக பேராதனைப் பல்கலைக்கழகத்தின் பொரு ளாதாரம்மற்றும்புள்ளி யியல் கற்கைகள் 19

### மனித உரிமை மீறல்கள்
# இராணுவம் உள்ளிட்ட சகல தரப்பிடமும்

பக்கச்சார்பற்ற விசாரணை மேற்கொள்க இலங்கையிடம் ஐ.நா வலியுறுத்து

03ஆம் பக்கம் பார்க்க

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"நான் கொடுப்பதற்கு பழகிக் கொண்டேன். காரணம் என்னிடம் அதிகம் இருப்பதால் அல்ல ஒன்றுமே இல்லாமல் இருப்பவன் வலி புரிந்து கொண்டதால்"

# விற்பனைக்கு

யாழ். வைத்தியசாலை வீதியில் சந்தைக்கு முன்பாக 25 அடி அகலமும் 200 அடி நீளமும் கொண்ட மாடிக் கடையும், யாழ்.விக்ரோறியா வீதியில் 5 பரப்புக் காணியும் 12 பரப்புக் காணியும், யாழ். K.K.S வீதியில் தட்டா தெரு சந்திக்கு அண்மையில் 3 1/2 பரப்பு வீடும் காணியும், யாழ். பலாலி வீதியில் யாழ் பல்கலைக்கழகத்திற்கு அண்மையில் 5 பரப்பில் அமைந்த மாடி வீடும், யாழ் கீரிமலை நகுலேஸ்வரன் கோயிலுக்கு அண்மையில் 160 பரப்புக் காணியும், யாழ். காரைநகர் மேற்கு வீதியில் 30 பரப்புக் காணியும், யாழ் கசூரினா பீச் அண்மையில் 260 பரப்புக் காணியும், யாழ் நல்லூர் கோவிலுக்கு அண்மையில் கோவில் வீதி முகப்புடன் 25 பரப்புக் காணியும், யாழ். K.K.S வீதியில் சிவன் கோவிலுக்கு அண்மையில் 5 பரப்பு காணியும், யாழ். K.K.S வீதியில் மனோகரா தியேட்டருக்கு அண்மையில் 3 மாடிக் கடையும், யாழ். சிவப்பிரகாசம் வீதியில் 2 1/2 பரப்பில் அமைந்த புதிய மாடி வீடும் விற்பனைக்கு உண்டு.

தொடர்பு

(15965)

**077 723 2535**

## பணிப்பெண் தேவை

யாழ் நகரில் உள்ள சிறிய குடும்பம் ஒன்றிக்கு வீட்டில் தங்கி இருந்து பணி புரிவதற்கு பணிப்பெண் தேவை.

(16005)

**077 327 6502**

## உடனடி வேலை வாய்ப்பு

நிர்வாக உத்தியோகத்தர்



விமானப் பயணச்சீட்டுக்கள்
விரைவுப் பொதிகள் சேவை
விசா சேவைகள்

**V2 TRAVELS**

எமது கிளைகள்

- கிளிநொச்சி
- சுன்னாகம்
- சாவகச்சேரி
- மானிப்பாய்
- நெல்லியடி
- பருத்தித்துறை
- திருகோணமலை
- வல்வெட்டித்துறை
- கோப்பாய்
- புத்தூர்
- பண்டத்தரிப்பு
- சங்கானை
- கொழும்பு

(C-6768)

வயது -30 வயதிற்குட்பட்டோர் (இருபாலாரும்)

அனுபவமுள்ளவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்

சம்பளம் - 30'000/-

பயிற்சியின்போது - 25'000/-

0777-068-777

v2vacancies@gmail.com

## சமையலாள் தேவை

- இந்திய உணவு வகைகள்
- உள்நாட்டு உணவு வகைகள்
- சூப், சிற்றுண்டி வகைகள்

என்பன செய்யத் தெரிந்தவர்கள் (அனுபவமுள்ளவர்கள்/ கல்வி பயின்றவர்கள்)

உணவு, தங்குமிட வசதி உண்டு.

(15999)

**075 068 3810**

வலம்புரி

விளம்பரத் தொடர்புகளுக்கு

076 636 3378

076 097 3127

## தவிர்க்க முடியாத காரணத்தால் அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய திகதி மாற்றம்



கடந்த 21.05.2023 ஞாயிற்றுக்கிழமை அன்று சிவபதமடைந்த குடும்ப விளக்கு அண்ணன்

**அமரர் செல்வன் யோகராசா யோதீஸ்**

அவர்களின் சிவபதப்பேறு குறித்த அந்தியேட்டிக் கிரியைகள் எதிர்வரும் 30.06.2023 வெள்ளிக்கிழமை காலை 7.00 மணியளவில் கீரிமலை புனித தீர்த்தக் கரையிலும் வீட்டுக்கிருத்தியக் கிரியைகள் 02.07.2023 ஞாயிற்றுக்கிழமை பகல் 11.00 மணியளவில் அன்னாரின் இல்லத்திலும் நடைபெறும் அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

பத்தானை வீதி,
தாவடி தெற்கு, கொக்குவில்.

(15992)

இங்ஙனம்
குடும்பத்தினர்




## அன்னை வீடு தேடிய மருத்துவ கவனிப்பு சேவை

## (ANNAI HOME CARE SERVICE)

ஜேர்மன் நாட்டில் பல முதியோர் பராமரிப்பு நிலையங்களை கடந்த 15 வருடங்களுக்கு மேலாக நடாத்தி வருகின்ற pflegedienst/ BergastraBe என்ற பிரபல நிறுவனத்துடன் இலங்கை மற்றும் இங்கிலாந்தை தளமாக கொண்டு இயங்கும் ViMaLi medical trust என்ற நிறுவனமும் இணைந்து இந்த அன்னை வீடு தேடிய மருத்துவ கவனிப்பு சேவையை தாயகத்தில் ஆரம்பித்து உள்ளனர்.

இந்த சேவையானது வடமாகாணத்தின் 5 மாவட்டங்களுக்கும் தற்போது உண்டு. இதனை கிழக்கு, மலையகம், கொழும்பு போன்ற அனைத்து இடங்களுக்கும் காலப்போக்கில் விஸ்தரிக்க உள்ளனர்.

*வடக்கு மாகாணத்தின் யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, மன்னார், வவுனியா ஆகிய 5 மாவட்டங்களிலும் எமக்கு முகவர்கள் (Agent) தேவை. ஆர்வமுள்ள நிர்வாகத்திறன் படைத்தவர்கள், nursing/care fieldல் அனுபவம் அல்லது ஆர்வமுள்ளவர்கள் எம்மைத் தொடர்பு கொள்ளலாம்.

* வடக்கின் அனைத்து ஊர்களிலும்/ கிராமங்களில் இருந்தும் தாதியர்கள்/உதவித்தாதியர்கள்/midwifeகள்/physiotherapistகள், ஓய்வுபெற்ற சுகாதார உத்தியோகத்தர்கள் தேவை. நீங்கள் எமது Job BANKஇல் பதிவு செய்து வைப்பதன் மூலம் உங்கள் உங்கள் ஊரில் / கிராமத்தில் முதியோர் / நோயாளர் பராமரிப்பு வேலை வரும் போது நாம் உங்களை தொடர்பு கொண்டு உங்களது ஓய்வான ஏற்ற நேரங்களில் வேலை தருவோம், உங்கள் வேலைக்கு மணித்தியால அடிப்படையில் கிழமைக்கு கிழமை உங்களுக்கு தரமான ஊதியம் உங்கள் வங்கிக்கணக்கிற்கு வழங்கப்படும். உங்களுக்கான மேலதிக பயிற்சி, uniform, தேவைப்பட்டால் சைக்கிள் / மோட்டார் சைக்கிள் என்பனவும் வழங்கப்படும்.

* இந்த வீடுதேடிய மருத்துவ சேவை தேவைப்படும் முதியவர்கள், நோயாளிகள் வடக்கின் எந்த ஊரில் இருந்தும் எமது சேவைக்காக எம்மை அணுகலாம். அவர்களது உறவுகள் வெளிநாட்டின் எந்த இடத்தில் இருந்தும் எமது சேவைக்காக எம்மை அணுகலாம்.

1st Doctor team Assesment (முதல் தடவையாக உங்கள் வீட்டிற்கு எங்கள் மருத்துவர்கள் வந்து பார்ப்பதற்கு) £50 (€ 60 /US $ 65 / can € 85 / Aus $ 95 / Swiss Fr 60 / SL Rs. 20,000)

**எங்கள் தாதிகள் (Nurse) உதவித் தாதிகள் (Nursing assistant) or Physiotherapist இற்கான கட்டணம்**

1) once / day - 2hours - £5 (Rs- 1800 )
2) twice / day - 2x 2hrs - £7 (Rs-2700)
3) three times / day - 3x 2hrs - £8 (Rs - 3100 )
4) 4 times / day - 4x 2hrs - £ 10( Rs -3700)
5) Day time care ( 8 am to 8 pm = 12 hrs - £140 / month ( RS - 56,000)
6) night time care ( 8 pm to 8 am ) - 12 hrs - £145 / month ( Rs - 58,000)
7) 24 hours care - £225 / month ( Rs 90,000)

E.mail- annaihc2023@gmail.com

Mob/WhatsApp- 0094 760 60 21 21

Office no. - 021 2286060

Website - www.annaihomecare.com FB- annaihomecare

ANNAI HOME CARE

Reg No. - NP/ 14 /45(02)/GN-23/2023/510

No. 203 A, A9 Road, Near Deport Junction, Kilinochchi.

(C-6759)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மனித உரிமை மீறல்கள்

# இராணுவம் உள்ளிட்ட சகல தரப்பிடமும் பக்கச்சார்பற்ற விசாரணை மேற்கொள்க

## இலங்கைக்கு ஐ.நா வலியுறுத்து

(கொழும்பு)

**காணாமல் ஆக்கப்படல்கள் மற்றும் தன்னிச்சையான தடுத்து வைப்புக்களை முடிவுக்குக் கொண்டுவர வேண்டும் என்றும் மனித உரிமை மீறல்கள் தொடர்பில் பொறுப்புக்கூறலை உறுதிப்படுத்துமாறும் ஐ.நா பொதுச்சபையின் மீளாய்வுக்குழு இலங்கைக்குப் பரிந்துரைத்துள்ளது.**

மேலும் காணாமல் போனோரின் குடும்பங்களுக்கு உரிய பதிலைக் கூறுவதுடன் இழப்பீட்டை வழங்கல், பயங்கரவாதத்தடைச் சட்டத்தை முற்றாக நீக்குவதுடன் அதற்குப் பதிலாகக் கொண்டு வரப்படும் புதிய சட்டம் சர்வதேச நியமங்களுக்கு அமைவாக இருப்பதை உறுதி செய்ய வேண்டும் என்றும் வலியுறுத்தியுள்ளது.

மேலும் அனைத்து விதமான மனித உரிமை மீறல்கள் சம்பவங்கள் குறித்து இராணுவத்தினர் உள்ளிட்ட சகல தரப்பினரிடமும் சுயாதீனமானதும் பக்கச்சார்பற்றதுமான விசாரணைகளை மேற்கொள்ளுமாறும் வலியுறுத்தியுள்ளது.

அதுமாத்திரமன்றி உள்ளகப் பொறிமுறை நிறுவுதல், வெறுப்புணர்வுப் பேச்சு மற்றும் அடக்குமுறைகளை தடுப்பதற்கு ஏற்ற செயன்முறையொன்றை நிறுவுவதன் மூலம் தேசிய நல்லிணக்கம் தொடர்பான கொள்கையை மேலும் வலுப்படுத்துமாறும் அக்குழு தெரிவித்துள்ளது.

இலங்கையின் மனித உரிமைகள் நிலவரம் குறித்த மீளாய்வினைக் கடந்த பெப்ரவரி மாதம் முதலாம் திகதி மேற்கொண்டிருந்தத நிலையில், இலங்கை மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள் பற்றிய பரிந்துரைகளை உள்ளடக்கிய 24 பக்க அறிக்கையிலேயே இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது. (4)

## சொகுசு பேருந்தில் கஞ்சாவினை கடத்திச் செல்ல முற்பட்ட நபர் கைது

(நெளுக்குளம்)

சொகுசு பேருந்தில் கஞ்சாவினை கடத்திச் சென்ற நபர் ஒருவரை கைது செய்துள்ளதாக வவுனியா பொலிஸார் தெரிவித்தனர்.

யாழில் இருந்து கொழும்பு நோக்கிச் சென்ற சொகுசு பேருந்தில் கஞ்சா கடத்தப்படுவதாக வவுனியா பொலிஸ் புலனாய்வு பிரிவிற்கு கிடைத்த தகவல்களுக்கு அமைய வவுனியா மணிக்கூட்டுகோபுர சந்தியில் நேற்றுக் காலை சோதனையில் ஈடுபட்ட பொலிஸார் குறித்த பேருந்தை வழிமறித்து அதில் சோதனையிட்ட போது பேருந்தில் மறைத்து வைக்கப்பட்ட நிலையில் காணப்பட்ட 1 கிலோ 900 கிராம் கேரளக் கஞ்சாவினை மீட்டனர்.

அதனை வைத்திருந்த குற்றச்சாட்டில் சந்தேகநபர் ஒருவரும் கைது செய்யப்பட்டார்.

குறித்த நபரிடம் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டுவரும் பொலிஸார் சந்தேகநபரை நீதிமன்றில் முற்படுத்துவற்கான நடவடிக்கையினை மேற்கொண்டுள்ளதாக தெரிவித்தனர்.

(4-6-299)

## முதலீடுகள் தொடர்பான புதிய சட்டம் விரைவில்

### இராஜாங்க அமைச்சர் திலும் அமுனுகம



(கொழும்பு)

இலங்கையில் தற்போதுள்ள சிக்கலான சட்டங்களுக்குப் பதிலாக இந்த வருட இறுதிக்குள் முதலீடுகள் தொடர்பான புதிய சட்டம் கொண்டுவரப்படும் என முதலீட்டு ஊக்குவிப்பு இராஜாங்க அமைச்சர் திலும் அமுனுகம தெரிவித்துள்ளார்.

இதன்படி, அடுத்த வருடம் முதல் இலங்கையில் முதலீடுகளை மேற்கொள்வதில் உள்ள சிக்கலான நிலைமைகள் நீக்கப்படும் என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

மேலும், முதலீட்டாளர்களின் பிரச்சினைகளைத் தீர்ப்பது உள்ளிட்ட வசதிகளை வழங்குவதற்காக உலக வர்த்தக மையத்தில் முதலீட்டாளர் வசதி மையம் ஒன்று ஸ்தாபிக்கப்பட்டுள்ளதாகவும் அது அனைத்து அரச நிறுவனங்களுடனும் இணைந்து செயற்படும் என்றும் இராஜாங்க அமைச்சர் திலும் அமுனுகம தெரிவித்தார்.

முதலீட்டாளர்கள் தமது பிரச்சினைகளை முன்வைப்பதற்கும் அது தொடர்பான நிறுவனங்களின் தலைவர்களை சந்திப்பதற்கும் சந்தர்ப்பம் வழங்கப்பட்டுள்ளதாகவும் முதலீட்டாளர்கள் தமது பிரச்சினைகளை விரைவாக தீர்த்துக் கொள்ள இந்த நிலையம் வாய்ப்பளிக்கும் எனவும் திலும் அமுனுகம சுட்டிக்காட்டியுள்ளார்.

புதிய சட்டம் நடைமுறைப்படுத்தப்படும் வரை தற்காலிக வேலைத்திட்டமாகவே இது நடைமுறைபடுத்தப்படுவதாக அவர் குறிப்பிட்டுள்ளார். (4)

## காற்று மாசுபாடு காரணமாக இருதய நோய்கள் அதிகரிப்பு

(கொழும்பு)

காற்று மாசுபாடு உலகின் ஏனைய பகுதிகளைப் போன்று இலங்கையிலும் இருதய நோய் அபாயத்தை அதிகரித்துள்ளதாக இரு தய நோய் நிபுணர் அனிது பத்திரன தெரிவித்துள்ளார்.

காற்று மாசுபாடு நீண்காலமாக ஒரு குறிப்பிடத்தக்க சுற்றுச்சூழல் பாதிப்பை ஏற்படுத்தி வந்த நிலையில் தற்போது மனித ஆரோக்கியத்தில் தாக்கத்தை ஏற்படுத்துவதாக குறிப்பிட்டுள்ளார்.

இதனால், காற்று மாசுபாடு இருதய நோயை உருவாக்கும் முக்கிய காரணியாக அடையாளம் காணப்பட்டுள்ளது என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

இலங்கையில் காற்று மாசுபாடு அதிகரித்து வருவதால், காற்று மாசுபாட்டுடன் தொடர்புடைய நோய்களைத் தடுக்க பாதுகாப்பு நடவடிக்கைகளை மேற்கொள்வது இன்றியமையாதது என்றும் குறிப்பிட்டுள்ளார்.

காற்று மாசுபாடு இருதய நோயால் பாதிக்கப்பட்டவர்களை மட்டுமல்லாமல், உயர் குருதி அழுத்தம், கொழுப்பு, நீரிழிவு, புற்றுநோய் மற்றும் நீண்டகால நுரையீரல் பிரச்சினை கொண்ட நோயாளிகளையும் தாக்கும் என்றும் அவர் தெரிவித்துள்ளார். (4)

## அணுமின் நிலையம் குறித்து இறுதி முடிவு எட்டப்படவில்லை

### எரிசக்தி அமைச்சு

(கொழும்பு)

இந்தியா, பங்களாதேஷ் போன்ற நாடுகளில் மேற்கொண்டதை போன்று அணுமின் நிலையத்தில் முதலீடு செய்வதற்கான ரஷ்யாவின் முன்மொழிவை முன்னெடுத்து செல்வது குறித்து அரசாங்கம் இதுவரை இறுதி நிலைப்பாட்டை எட்டவில்லை என மின்சக்தி எரிசக்தி அமைச்சின் செயலாளர் தெரிவித்துள்ளார்.

ரஷ்ய அணுசக்தி நிறுவனமான ரோசாட்டம், இரண்டு அணு உலைகளை இயக்கி 300 மெகாவாட் ஆற்றலை உற்பத்தி செய்யும் அணுமின் நிலையத்தை உருவாக்க முன் வந்துள்ளது.

ரொசாட்டம் நிறுவனத்தின் பிரதிநிதிகளுடனான சந்திப்பின் போது, அணுசக்தி துறையில் முதலீடு செய்வதற்கான இந்த திட்டத்தை பரிசீலிக்க இலங்கை ஒப்புக்கொள்வதாக, ரஷ்யாவிற்கான இலங்கைத் தூதுவர் பேராசிரியர் ஜனிதா லியனகே தெரிவித்திருந்தார்.

இந்த விடயம் தொடர்பாக கருத்துத் தெரிவித்துள்ள மின்சக்தி எரிசக்தி அமைச்சின் செயலாளர் மாபா பத்திரன, அணுமின் நிலையம் குறித்து முடிவெடுப்பதற்கு முன்னர் பல விடயங்களைக் கவனத்திற் கொள்ள வேண்டும் என்பதனால் இதுவரை எந்தத் தீர்மானமும் எடுக்கப்படவில்லை என கூறியுள்ளார்.

குறிப்பாக பாதுகாப்பு அம்சங்களை கவனத்திற் கொள்ள வேண்டும் என்றும் அத்தோடு அணுசக்தி தொடர்பான சர்வதேச மாநாடுகளை ஆராய வேண்டும் என்பதனால் அரசாங்கம் எந்த இறுதி நிலைப்பாட்டையும் எட்டவில்லை என்றும் மாபா பத்திரன குறிப்பிட்டுள்ளார். (4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணீர் அஞ்சலி



நல்லூர் பிரதேச சபையின் முன்னாள்
கௌரவ உறுப்பினர்


## அமரர் திரு. இராசையா இராஜலிங்கம்

அவர்களின் ஆத்மா சாந்தியடைய
இறைவனைப் பிரார்த்திப்பதோடு
அன்னாரின் பிரிவால் துயருறும்
குடும்பத்தினருக்கு எனது
ஆழ்ந்த அனுதாபங்களைத்
தெரிவித்துக்கொள்கின்றேன்.

இணுவையூர் வி. கே. குகானந்தன்
முன்னாள் உறுப்பினர் நல்லூர்
பிரதேச சபை
ஐக்கிய தேசிய கட்சி

(C-6763)

# கண்ணீர் அஞ்சலி



அமரர்

## அருணாசலம் சிவராஜா

(ஓய்வு நிலை தபால் அதிபர், வல்லிபுர ஆழ்வார் ஆலய நீண்ட காலத் தொண்டன்)

எமது ஆலயத்தில் நீண்ட காலமாக
தொண்டனாக இருந்து ஆலய வளர்ச்சிக்கு
பங்காற்றிய அன்னார் இந்தியாவில் அகால
மரணமடைந்த செய்தியறிந்து மிகுந்த
மனவேதனை அடைந்தோம். அன்னாரின்
ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல
வல்லிபுர ஆழ்வாரைப் பிராரத்திக்கின்றோம்.
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

அறங்காவலர் சபை,
வல்லிபுர ஆழ்வார் சுவாமி கோவில்,
துன்னாலை வடக்கு, புலோலி.

(C-6762)

# கண்ணீர் அஞ்சலி



யா/ கொக்குவில் இந்து ஆரம்ப பாடசாலையின் வளர்ச்சிக்கும்
உயர்ச்சிக்கும் உழைத்தவரும் பழைய மாணவர் சங்கத்தின்
முதலாவது உப தலைவரும்

## அமரர் திரு. இராசையா இராஜலிங்கம்

அவர்களின் மறைவினால் துயருறும் அன்னாரின்
குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத்
தெரிவிப்பதுடன் அன்னாரிற்கு எமது கண்ணீர் அஞ்சலியை
செலுத்தி அவர்களின் ஆத்மா சாந்தியடைய
இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

பழைய மாணவர் தாய் சங்கம்
யா/ கொக்குவில் இந்து ஆரம்ப பாடசாலை

(C-6754)

# ஐரோப்பா சம்பியன் தகுதி சுற்றில் பிரான்ஸ் வெற்றி






ஐரோப்பா சம்பியன்ஷிப் தகுதிச் சுற்றில் நேற்று முன் தினம் நள்ளிரவு நடைபெற்ற ஆட்டம் ஒன்றில் முன்னணி அணியான பிரான்ஸ் ஜிப்ரால்டரை எதிர்கொண்டது.

இதில் பிரான்ஸ் 3-0 என வெற்றி பெற்றது. ஆட்டத்தின் 3 ஆவது நிமிடத்தில் கிங் ஸ்லி வழங்கிய பந்தை சிறப் பான முறையில் கோலாக்கினார் ஜிராடு.

பிரான்ஸ் அணிக்காக அவர் அடித்த 54 ஆவது கோல் இதுவாகும். அதன்பிறகு முதல் பாதிநேரம் ஆட்டம் முடியும் தருவாயில் இருக்கும்போது பெனால்டி வாய்ப்பு மூலம் எம்பாப்பே ஒரு கோல் அடித்தார்.

இதன் மூலம் பிரான்ஸ் அணிக்காக எம்பாப்வே அடித்த கோல்கள் எண்ணிக்கை 39 ஆக உயர்ந்துள்ளது. 2 ஆவது பாதி ஆட்டத்தில் பிரான்ஸ் மேலும் ஒரு கோல் அடிக்க 3-0 என வெற்றி பெற்றது.

மற்ற ஆட்டங்களில் பின்லாந்து, இங்கிலாந்து, துருக்கி, உக்ரைன், கிரீஸ், அர்மேனியா, டென்மார்க், சுவிட்சர்லாந்து, பிரான்ஸ், கஜகஸ்தான் அணிகள் வெற்றி பெற்றன. "பி" பிரிவில் இடம்பிடித் துள்ள பிரான்ஸ் 3 போட்டிகளில் விளையாடி மூன்றிலும் வெற் றிபெற்று முதல் இடம்வகிக்கிறது. (4)


# காணிகள் விற்பனைக்கு

**யாழ் நகரில் மாநகர சபை எல்லைக்குள்
காணிகள் விற்பனைக்கு உண்டு**

- கோயில் வீதியில் 3 காணிகளும்
- பலாலி வீதியில் 5 பரப்பு அளவை கொண்ட 3 காணிகளும்
- K.K.S வீதியில் 1 3/4 பரப்பு 3 கடையுடன்
- K.K.S வீதியில் 3 1/2 பரப்புடன் வீடு உண்டு.
- வைமன் றோட்டில் 2 பரப்பு 15 குழி விற்பனைக்கு உண்டு.

நேரடி தொடர்பு கொள்ளவும்

(c-6765)

**077 603 3259**

# காணி விற்பனைக்கு

**யாழ்ப்பாணம் கல்வியங்காட்டில் 4 பரப்பு காணி விற்பனைக்கு**

- கல்வியங்காட்டு சந்தியில் இருந்து 1 ½ km தூரத்தில் பருத்தித்துறை வீதியில் இருந்து 1200m தூரம் (இலங்கை நாயகி அம்மன் கோயில் முன் வீதி
- கல்வியங்காடு புதிய செம்மணி வீதியில் மடத்தடியில்
- இரண்டு பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில் 18 அடி பாதையுடன்
- ஒரு பரப்பின் இரண்டு இலட்சத்து ஐம்பதாயிரம் ரூபாய் மட்டும்.
- குடியிருப்புகள் சூழ உள்ள காணி

(16007)

**076 739 0413**
**076 436 5814**


# கண்ணீர் அஞ்சலி



எமது பாடசாலையின் பழைய
மாணவர் சங்க முன்னாள்
நிர்வாக சபை உறுப்பினர்

## அமரர் இராசையா இராஜலிங்கம்

அவர்களின் பிரிவினால் துயருற்றிருக்கும்
அன்னாரின் குடும்பத்தினருக்கு
ஆழ்ந்த அனுதாபங்களைத்
தெரிவித்துக் கொள்வதுடன் அவரது
ஆத்மா சாந்தியடைய இறைவனை
வேண்டுகிறோம்.
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

பாடசாலைச் சமூகம்
யா/ கொக்குவில் இந்து
ஆரம்ப பாடசாலை

(C-6766)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### அமெரிக்காவிடமிருந்து

# 3 மில்லியன் டொலர் மருந்துப் பொருட்கள்

(கொழும்பு) 3 மில்லியன் அமெரிக்க டொலருக்கும் அதிகமான அத்தியாவசிய மருந்துகள் மற்றும் மருத்துவப் பொருட்களை அமெரிக்கா ரிஸ் அமைப்பு மூலம் இலங்கை பெற்றுள்ளது.

வோஷிங்டனில் உள்ள இலங்கை தூதரகத்தின் உத்தியோகபூர்வ வேண்டுகோளுக்கு இணங்க, சுகாதாரத்தை மையமாகக் கொண்ட நிவாரணம் மற்றும் மேம்பாட்டு அமைப்பான அமெரிக்காரிஸ், மருத்துவப் பொருட்களை வழங்கியுள்ளதாக வெளியுறவு அமைச்சகம் தெரிவித்துள்ளது. (4)

# வாக்காளர் பெயர் பதிவு! கால எல்லை நீடிக்க ஆராய்வு

(கொழும்பு) வாக்காளர் பட்டியலில் பெயர் பதிவு செய்வதற்கான கால அவகாசம் நேற்று முன்தினத்துடன் முடிவடைந்துள்ளதாக தேர்தல்கள் ஆணைக் குழு தெரிவித்துள்ளது.

சில மாவட்டங்களில் நடவடிக்கைகள் உரிய முறையில் மேற்கொள்ளப்படவில்லை எனவும் தகவல்கள் தெரிவிக்கப்பட்டுள்ளதாக ஆணைக் குழு தலைவர் சட்டத்தரணி நிமல் புஞ்சிஹேவா தெரிவித்தார்.

அதன் காரணமாக அந்த மாவட்டங்களில் வாக்குப்பதிவு நடவடிக்கைகளுக்கு இன்னும் சில நாட்கள் அவகாசம் அளிக்க தேர்தல்கள் ஆணைக் குழுவுடன் கலந்துரையாடவுள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார். (4)

# ஆதிக் குடியிருப்புக்களில் அகழ்வுப் பணி மேற்கொள்க

## ஜனாதிபதி உத்தரவு



(கொழும்பு) இலங்கையின் ஆதிக் குடியிருப்புகளில் அகழ்வுப் பணிகளை மேற்கொண்டு சனப்பரம்பல் தொடர்பான ஆய்வுகளை மேற்கொள்ளுமாறு ஜனாதிபதி உத்தரவிட்டுள்ளார்.

பிரதமர் தினேஷ் குணவர்த்தன, கலாசார மற்றும் மதவிவகாரங்கள் அமைச்சர் விதுர விக்கிரமநாயக்க ஆகியோரின் வேண்டுகோளின் பிரகாரம் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இந்த உத்தரவைப் பிறப்பித்துள்ளார்.

இதன் பிரகாரம் இலங்கையின் ஆதிகுடியிருப்புகளான மல்வத்துஓயா ஆற்றங்கரைப் பகுதி, அநுராதபுரத்தின் மகாவிகாரை அமைந்துள்ள பிரதேசம் மற்றும் சீதாவாக்கை பிரதேசங்களில் அதற்கான அகழ்வுப் பணிகள் மேற்கொள்ளப்படவுள்ளன.

குறித்த பிரதேசங்களில் மேற்கொள்ளப்படும் அகழ்வுப் பணிகளின் மூலம் தொல்பொருள் முக்கியத்துவம் வாய்ந்த இடங்கள் மற்றும் சின்னங்களைக் கண்டறிதல், அவற்றைப் பாதுகாத்தல் என்பவற்றுக்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவுள்ளன.

அத்துடன் திரியாய் பிரதேசத்தில் முற்காலத்தில் அமைந்திருந்த துறைமுகம் மற்றும் அங்கிருந்து ஹொரவப்பொத்தானை வரையான நீர்வழிப்பாதை அமைந்திருந்த வழித்தடம் என்பனவும் அகழ்வாராய்ச்சிக்கு உட்படுத்தப்படவுள்ளது.

கொழும்பு கோட்டை பிரதேசத்திலும் அவ்வாறான அகழ்வுகளை மேற்கொள்ள உத்தேசிக்கப்பட்ட போதிலும், அப்பிரதேசத்தில் தற்போதைக்கு அதிகரித்துள்ள சனப்பரம்பல் காரணமாக அகழ்வாராய்ச்சிகளை முன்னெடுக்கும் சாத்தியம் இல்லை என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (4)


# கண்ணீர் காணிக்கை



கொக்குவில் மஞ்சவனப்பதி முருகன் ஆலய தர்மகர்த்தா சபையின் தற்போதைய உப தலைவரும் நீண்டகால செயலாளருமாகவும் இருந்து ஆலய வளர்ச்சிக்குப் பெரும் பங்காற்றியவருமாகிய

அமரர்.திரு.

**இராசையா இராசலிங்கம்**

அவர்களின் மறைவினால் துயருறும் அதேவேளை அவர்களின் குடும்பத்தினருக்கும் எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்வதோடு அன்னாரின் ஆத்மா மஞ்சவனப்பதி முருகனின் திருவடிகளை சென்றடைய பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

பிரிவால் துயருறும்
தர்மகர்த்தாசபை, கொக்குவில் மஞ்சவனப்பதி முருகன் ஆலயம். (15995)

# கண்ணீர் அஞ்சலி



கொக்குவில் இந்துக் கல்லூரி பழைய மாணவர் சங்கத்தின் நீண்டகால நிர்வாக சபை உறுப்பினராக இருந்து பணியாற்றிய

அமரர் திரு.இராசையா

**இராசலிங்கம்**

அவர்கள் காலமான செய்தி அறிந்து ஆழ்ந்த துயர் அடைவதுடன் அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தை தெரிவிப்பதோடு அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

(15996)

பழையமாணவர் சங்கம் (தாய்ச்சங்கம்)
யா/கொக்குவில் இந்துக் கல்லூரி.


# இராசிபலன்

18.06.2023
ஆனி 03, ஞாயிற்றுக்கிழமை
அமாவாசை முற்பகல் 10.20 மணிவரை
மிருகசீரிடம் மாலை 6.31 மணிவரை


சுபநேரம்-8.53-10.23 மணிவரை
இராகுகாலம்-4.23-5.53 மணிவரை

சந்திராஷ்டமம்- விசாகம், அனுசம்
சர்வதேச தந்தையர் தினம்

வளவன்


மேஷம்


குடும்பத்தில் குதூகலம் தரும் சம்பவமொன்று நடைபெறலாம், பகையொன்று நட்பாகலாம், சவால்களை சாமர்த்தியமாகச் சமாளிப்பீர்கள், போசன சுகமுண்டு.


கடகம்

தொலைபேசி வழியில் கேட்கும் செய்திகளால் உற்சாகமடைவீர்கள், மாற்றங்களால் ஏற்றம் பெறுவீர்கள் சுப விரயங்கள் மேலோங்கும் நாள்.


துலாம்

உறவினர் வழியில் மனநிறைவான செய்தியொன்று வந்து சேரலாம், வெளியூர் பயணங்களால் நன்மையுண்டு, தொழில் ரீதியாக சிலர் உங்களிடம் உதவி கேட்டு வரலாம்.


மகரம்

பிரியமான சிலரின் சந்திப்பு இடம்பெறலாம், கனிவாகப் பேசி காரியம் சாதிப்பீர்கள், மறைமுகப் போட்டிகள் மாறும், சேமிப்பை அதிகரிக்கும் எண்ணம் உருவாகும்.


ரிஷபம்

சுபகாரியப் பேச்சுக்களில் முன்னேற்றம் காண்பீர்கள், பொது வாழ்வில் மதிப்பும் மரியாதையும் உயரும் நாள், சுப நிகழ்வுகளில் கலந்து கொள்ளும் வாய்ப்புண்டு.


சிம்மம்

இல்லத்தில் இனிய சம்பவங்கள் நடைபெறும் வாய்ப்புண்டு, தொழிலில் வருமானத்தை அதிகரிக்க புதிய திட்டங்கள் தீட்டுவீர்கள், காரிய அனுகூலமுண்டு.


விருச்சிகம்

ஆதவன் வழிபாட்டால் ஆதாயம் காண வேண்டிய நாள், மனதில் இனம்புரியாத குழப்பங்கள் தோன்றி மறையும், ஆரோக்கியத்தில் அக்கறை தேவை.


கும்பம்

புண்ணிய காரியங்களில் ஆர்வம் கூடும், பிள்ளைகளின் நலனில் அதிக அக்கறை காட்டுவீர்கள், நட்பு வட்டம் விரிவடையும் நாள், தாழ்ந்த சுபாவமுண்டு.


மிதுனம்

பொதுநல ஈடுபாட்டில் புகழ் பெறுவீர்கள், மகிழ்ச்சி அதிகரித்து மனமாற்றம் காணும் நாள், உடல் ரீதியான உபாதைகள் ஏற்பட்டு உற்சாகம் குறையலாம்.


கன்னி

தூர தேசத்திலிருந்து மகிழ்ச்சி தரும் தகவல்கள் வந்து சேரலாம், புதிய திட்டங்கள் தீட்டி தொழிலில் ஆதாயம் காண முற்படுவீர்கள், அந்நியர்களின் ஒத்துழைப்புக்கள் கிடைக்கும் வாய்ப்புண்டு.


தனுசு

குடும்பத் தேவைகளை நிறைவு செய்வதில் ஆர்வம் காட்டுவீர்கள், நண்பர்களின் சந்திப்பால் பரவசமடைவீர்கள், போட்டியாக இருந்தவர்கள் மனம் மாறுவர்.


மீனம்

புதிய நபர்களின் அறிமுகம் கிடைக்கும், தொலைபேசி வழியில் பொன்னான செய்தியொன்று வந்து சேரலாம், அடுத்தவர் நலனில் அதிக அக்கறை காட்டுவீர்கள்.

விபரீத எண்ணங்கள் விபரீத விளைவுகளை ஏற்படுத்தி விடும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நெல்லியடியில் 6 1/2 பவுண் நகை திருட்டு ஒரு மணி நேரத்தில் மீட்ட பொலிஸ்

## திருடியவரும் கைது

(கரணவாய்)

எட்டு இலட்சத்து எண்பதாயிரம் ரூபா பெறுமதியான 6 1/2 தங்கப்பவுண் நகைகளை திருடிய பெண்ணை கைது செய்ததுடன் திருடப்பட்ட பொருட்களும் மீட்கப்பட்டதாக நெல்லியடிப் பொலிஸார் தெரிவித்தனர்.



நெல்லியடி பொன் கந்தையா வீதியில் உள்ள வீடொன்றில், தொழில் நிமிர்த்தமாக நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை காலை சென்றிருந்த வீட்டின் உரிமையாளர் மதியம் 1 மணியளவில் வீட்டிற்கு திரும்பியருந்த போது வீட்டின் கதவு உடைத்திருப்பதை அவதானித்து உள்ளே சென்று பார்த்த போது அலுமாரியில் வைக்கப்பட்டிருந்த நகைகள் களவாடப்பட்டுள்ளமை தெரிய வந்துள்ளது.

சம்பவம் தொடர்பில் நெல்லியடிப் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளதையடுத்து நெல்லியடி பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி காஞ்சனா விமலவீர தலைமையிலான பொலிஸ் குழுவினர் ஒரு மணித்தியாலத்திற்குள் சந்தேகநபரை கைது செய்ததுடன் நகைகளையும் மீட்டுள்ளனர்.

தனியார் நிதிநிறுவனத்தில் 3 3/4 பவுண் நிறையுடைய தாலிக்கொடி அடைவு வைத்து 3 இலட்சம் பணத்தைப் பெற்றுள்ளனர். அதில் 2 இலட்சத்து 92 ஆயிரம் ரூபா பணத்தை மீட்டுள்ளதுடன் மிகுதி 2 3/4 பவுண் நகைகளை பிறிதொரு வீட்டின் பூச்சாடியின் கீழ் வைத்திருந்த நிலையில் பொலிஸார் மீட்டுள்ளனர்.

சந்தேகநபர் மற்றும் மீட்கப்பட்ட நகைகள் என்பன பருத்தித்துறை நீதிமன்றல் முற்படுத்த நடவடிக்கை மேற்கொண்டுள்ளதாக நெல்லியடி பொலிஸார் தெரிவித்தனர். (4-6)



இணுவில் கந்தசுவாமி கோயில் தேர்த்திருவிழா நேற்று பக்திபூர்வமாக இடம்பெற்றது. (படம்:-சிவசாந்தன்)

SINCE 1963

சதாபொன்ஸ் கல்வி நிலையம்

மாலிசந்தி, அல்வாய்

A/L வர்த்தகப்பிரிவு -2025

ஆரம்பம் - 24.06.2023 காலை 8.00 மணி

கணக்கீடு – திரு. V.பகீரதன்

வணிகக்கல்வி – திரு.T.லோகேஸ்

பொருளியல் – திரு.V– ஜெகதீஸ்

2023, 2024 வகுப்புக்கள் நடைபெறுகின்றன.

துரித மீட்டல் வகுப்பு ஆரம்பம் 01.07.2023 காலை 8.00 மணி

அனுமதிகளைக் காரியாலயத்தில் பெற்றுக் கொள்ளவும்.

077 309 5176, 077 925 0105, 021 226 3206

(c-6760)

## நெற்செய்கையில்

# பன்றி நெல் தாக்கத்தை கட்டுப்படுத்த யாழில் நடமாடும் விழிப்புணர்வு கருத்தரங்கு

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்டத்தில் பன்றி நெல், களை நெல் தாக்கத்தினை கட்டுப்படுத்துதல் தொடர்பான நடமாடும் விழிப்புணர்வு கருத்தரங்கு விவசாயிகள் ஒன்று கூடும் இடங்களில் வடமாகாண விவசாயத் திணைக்களம் கமநல அபிவிருத்தி திணைக்களத்தின் ஒருங்கிணைவுடன் நடத்தப்படவுள்ளது.

யாழ்.மாவட்டத்தில் கடந்த காலபோகங்களில் பன்றி நெல்லின் தாக்கமானது மறவன் புலவு, சாவகச்சேரி, மாசியப்பிட்டி, கந்தரோடை, அளவெட்டி, கரவெட்டி என பல பிரதேசங்களில் அடையாளம் காணப்பட்டது.

இப் பன்றி நெல்லின் தாக்கத்தினால் நெல் விளைச்சல் மற்றும் தரம் குறைவடைந்திருந்தது. இப் பன்றி நெல்லானது உறங்கு நிலையில் 5 வருடங்கள் வரை மண்ணில் காணப்படக் கூடிய சாத்தியம் உள்ளது.

பன்றிநெல்லின் தாக்கத்தைக் குறைப்பதற்கு ஒருங்கிணைந்த கட்டுப்பாட்டு முறைகள் மேற்கொள்ளப்பட வேண்டும்.

நாளை 19 ஆம் திகதி காலை 9.30 மணிக்கு சாவகச்சேரியில், பி.ப 2 மணிக்கு கைதடி, 20 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை காலை 9.30 மணிக்கு கரவெட்டி, பி.ப 1 மணிக்கு புலோலி, பி.ப 3 மணிக்கு அம்பன், 21 ஆம் திகதி புதன் கிழமை காலை 9.30 மணிக்கு புத்தூர், பி.ப 1 மணிக்கு உரும்பிராய், பி.ப.3 மணிக்கு நல்லூர், 22 ஆம் திகதி வியாழக்கிழமை காலை 9.30 மணிக்கு அளவெட்டி, பி.ப 2 மணிக்கு தொல்புரம், 23 ஆம் திகதி காலை 9.30 மணிக்கு உடுவில், பி.ப 2 மணிக்கு சண்டிலிப்பாய் ஆகிய பிரதேசங்களில் இடம்பெறவுள்ளது என யாழ்.பிரதி மாகாண விவசாயப் பணிப்பாளர் திருமதி. அ.சிறீரங்கன் அறிவித்துள்ளார். (4-6-104)

சொர்க்கம் திருமண சேவை

- கனடாவில் வசிக்கும் 39 வயது விவாகரத்தான மணமகனுக்கு இலங்கையில் பொருத்தமான மணமகளை எதிர்பார்க்கின்றோம்.
- இலங்கையில் பிறந்த 29 வயது பட்டதாரி மணமகனுக்கு பொருத்தமான மணமகளை வெளிநாட்டில் எதிர்பார்க்கின்றோம்.
- கனடாவில் பிறந்த 32 வயது கத்தோலிக்க சமயத்தைச் சேர்ந்த மணமகளுக்கு கனடாவில் பொருத்தமான படித்த மணமகனை எதிர்பார்க்கின்றோம்.

தொடர்பு கொள்ள-:001 416 666 1855(கனடா) 077 200 0230, 077 887 6969 (யாழ்ப்பாணம்)

(16003)

# வடமராட்சி கிழக்கில் மணல் கொள்ளை அதிகரிப்பு

## சுமந்திரன் எம்.பி

(அராலி)

யாழ்ப்பாணம் - வடமராட்சி கிழக்கு குடாரப்பு பகுதியில் மணல் யாட் அமைத்து சட்டவிரோதமான மணல் கொள்ளையில் ஈடுபடுவதாக யாழ். மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் பகிரங்கமாக குற்றஞ் சாட்டியுள்ளார்.

யாழ்.வடமராட்சி கிழக்கு பிரதேச ஒருங்கிணைப்பு குழு கூட்டம் நேற்று முன்தினம் இடம்பெற்ற வேளை சட்டவிரோதமான மணல் அகழ்வு இடம்பெறுவதாகவும் அதனை பொலிஸார் கண்டுகொள்வதில்லை எனவும் மக்கள் குற்றச்சாட்டு முன்வைத்த வேளை அதற்கு பதிலளிக்கையிலே பாராளுமன்ற உறுப்பினர் எம்.ஏ. சுமந்திரன் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இதேவேளை சட்ட விரோதமான நடவடிக்கைகளை தவிர்ப்பதற்கு மருதங்கேணி, நாகர் கோவில், வல்லிபுரம், முள்ளிச்சந்தி ஆகிய நான்கு இடங்களிலும் பொலிஸ் மற்றும் இராணுவ காவலரண்கள் இருக்கின்ற நிலையில் இது எவ்வாறு இடம்பெறுகிறது என கிராம மட்ட அமைப்பு பிரதிநிதிகள் கேள்வி எழுப்பியமை குறிப்பிடத்தக்கது. (4-6-104)

# ஹெரோயினை வைத்திருந்தவர் கைது

(கரணவாய்)

1700 மில்லி கிராம் ஹெரோயின் போதைப்பொருளை உடமையில் வைத்திருந்த இருவர் விசேட அதிரடிப்படையினரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

புலோலி, காந்தியூர் பகுதியில் உள்ள வீடு ஒன்றில் ஹெரோயின் விற்பனை இடம்பெறுவதாக யாக்கரைப் பகுதியில் உள்ள விசேட அதிரடிப்படையினருக்கு கிடைக்கப் பெற்ற இரகசிய தகவலை அடுத்து நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை இரவு வீட்டினை விசேட அதிரடிப் படையினர் சோதனையிட்டனர்.

இதன்போது வீட்டாரின் உடைமையில் இருந்த 1700 மில்லி கிராம் ஹெரோயின் போதைப்பொருள் மீட்கப்பட்டுள்ளதுடன் 40 வயதுடைய பெண் ஒருவரும் 42 வயதுடைய ஆண் ஒருவரும் கைது செய்யப்பட்டு பருத்தித்துறை பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளனர். (4-6-60)

## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி ரூபா | மருதனார்மடம் ரூபா | சாவகச்சேரி ரூபா | கிளிநொச்சி ரூபா |
|---|---|---|---|---|
| கத்தரிக்காய் | 160 | 220 | 150 | 240 |
| உருளைக்கிழங்கு | 180 | 180 | 180 | 200 |
| பச்சைமிளகாய் | 550 | 400 | 400 | 500 |
| தக்காளி | 280 | 300 | 300 | 300 |
| மரவள்ளிக்கிழங்கு | 220 | 220 | 200 | 200 |
| கோவா | 280 | 250 | 300 | 300 |
| கரட் | 360 | 380 | 380 | 450 |
| பூசணி | 80 | 80 | 100 | 120 |
| புடோல் | 150 | 140 | 200 | 300 |
| வாழைக்காய் | 100 | 140 | 100 | 120 |
| சின்ன வெங்காயம் | 320 | 360 | 400 | 450 |
| பெரிய வெங்காயம் | 130 | 140 | 130 | 140 |
| பாகற்காய் | 500 | 800 | 400 | 700 |
| வெண்டக்காய் | 180 | 180 | 140 | 300 |
| கருணைக் கிழங்கு | 140 | 200 | 200 | 200 |
| பயற்றங்காய் | 550 | 450 | 300 | 350 |
| லீக்ஸ் | 320 | 300 | 380 | 350 |
| பீற்றூட் | 450 | 300 | 400 | 400 |
| கறிமிளகாய் | 380 | 400 | 400 | 400 |
| முருங்கைக்காய் | 600 | 800 | 1000 | 800 |
| போஞ்சி | 550 | 480 | 480 | 500 |
| கத்தரிதம்புள்ள | 120 | 160 | 150 | 200 |
| கீரை - 1 பிடி | 50 | 50 | 50 | 60 |
| தேசிக்காய் | 350 | 300 | 300 | 400 |
| தேங்காய் (ஒன்று) | 50 | 90 | 80 | 70-100 |
| இராசவள்ளி | 350 | 300 | 250 | 300 |
| வெங்காயப்பூ | 450 | 500 | 400 | 800 |
| முள்ளங்கி | 120 | 180 | 200 | 250 |
| பொன்னாங்காணி | 80 | 100 | 80 | 50 |
| வல்லாரை | 40 | 30 | 50 | 50 |
| ஈரப்பலா | 120 | 200 | --- | 200 |

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

வலம்புரியின் வாரமலர்
# சங்குநாதம்
நாதம் 402
Viber 076 636 3378



## தொல்லியல் திணைக்கள பணிப்பாளர் பதவி விலகல்

# ஆதரவும் எதிர்ப்பும்



**தமிழர் பூர்வீகங்கள் சுவீகரிக்கப்பட்டு வரலாற்றைப் புனையும் செயற்றிட்டம் நிறுத்தப்பட வேண்டும். இல்லையேல் இன்னும் பத்து வருடங்களில் வடக்கு-கிழக்கு முழுமையாக பௌத்த மயமாகி விடும் என்பதில் சந்தேகமில்லை.**

தொல்பொருள் திணைக்களப் பணிப்பாளர் நாயகம் அனுரமனதுங்க தனது பதவியை இராஜினாமாச் செய்துள்ளார்.

இதுவே தற்போதைய பேசுபடுபொருளாக மாறியிருக்கின்றது.

இலங்கை வரலாற்றில் எப்போதும் இல்லாத அதிசயம் ஒன்று தற்போது நடந்தேறியிருக்கின்றது.

ஆம், ஒரு நாட்டின் ஜனாதிபதி அந்நாட்டின் சிறுபான்மை தமிழ் இனத்திற்காகத் தனது குரலை உயர்த்திப் பேசியிருக்கிறார்.

அதுவும் தமிழ்த் தரப்புகள் முன்னிலையில் என்பதுதான் இன்னும் விஷேடம்.

கடந்த திங்கட்கிழமை ஜனாதிபதிக்கும் தமிழ்ப் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கும் இடையில் வடக்கு-கிழக்கில் அரசினால் மேற்கொள்ளப்படும் காணி சுவீகரிப்பு தொடர்பில் கலந்துரையாடப்பட்டது.

குறித்த சந்திப்பில் முல்லைத்தீவு குருந்தூர் மலைப் பிரதேசத்தில் தொல்பொருள் திணைக்களத்தினால் சுவீகரிக்கப்பட்டிருக்கும் காணி தொடர்பில் கலந்தாலோசிக்கப்பட்டது.

இப் பகுதியில் 275 ஏக்கர் நிலம் தொல்பொருள் திணைக்களத்தினால் விகாரைக்குரியதாக சுவீகரிக்கப்பட்டிருந்தது.

இந்த விடயத்தை கேள்வியுற்ற ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தொல்பொருள் திணைக்களப் பணிப்பாளரைப் பார்த்து ஒரு சாதாரண விகாரைக்கு ஏன் இவ்வளவு காணி தேவையிருக்கிறது.

நாட்டின் மிகப் பெரிய விகாரைகளான மகாவிகாரை மற்றும் அபயகிரிவிகாரை என்பவற்றுக்கு கூட 100 ஏக்கர் காணிதான் இருக்கின்றது. இந்த இரு விகாரைகளையும் விட பெரிய விகாரையா குருந்தூர் மலை விகாரை எனக் கேள்வி எழுப்பியதுடன் மக்களின் காணிகளை தேவையின்றி அபகரிக்காதீர்கள். அது ஒருநாளும் முறையல்ல எனக் கூறியிருந்தார். அதற்குப் பதில் வழங்க முற்பட்ட தொல்பொருள் திணைக்களப் பணிப்பாளரை நிறுத்திய ஜனாதிபதி எனக்கு நீங்கள் வரலாறு கற்பிக்க வேண்டாம். நான் உங்களுக்கு வரலாற்றைக் கற்பிக்கவா? என கடும் தொனியில் கேள்வி எழுப்பியிருந்தார்.

தமிழ் இனத்தின் பூர்வீகக் காணிகளை அபகரிக்கும் செயலில் மிகத் தீவிரமாகச் செயற்பட்டு வரும் தொல்லியல் திணைக்களத்தைக் கட்டுப்படுத்த ஆள் இல்லையே என புழுங்கிக் கொண்டிருந்த தமிழ் இனத்திற்கு ஜனாதிபதியின் குறித்த பேச்சு நிம்மதியைத் தந்திருக்கிறது.

மேற்குறித்த விடயத்தின் எதிரொலி தொல்பொருள் திணைக்களப் பணிப்பாளர் நாயகம் அனுரமனதுங்க தன் பதவியினை இராஜினாமாச் செய்துள்ளார் என அமைச்சர் விதுர விக்கிரமசிங்க தெரிவித்திருக்கின்றார்.

தமிழர் நிலங்கள் என்றால் அதை எப்படி வேண்டுமானாலும் சுவீகரிக்கலாம் என எண்ணம் கொண்ட பேரினவாத சக்திகள் தொல்பொருள் திணைக்களம் எனும் போர்வையில் தமிழ் மக்களின் வழிபாட்டுத் தலங்கள், விவசாய நிலங்களை அடையாளப்படுத்தி ஆக்கிரமிப்பது மட்டுமன்றி அவர்களை அச்சுறுத்தவும் செய்தனர்.

தமிழ்த் தரப்புகள் குறித்த ஆக்கிரமிற்கு எதிராகப் பல எதிர்ப்புகளை தெரிவித்திருந்த போதிலும் அவற்றுக்கு பலன் எதுவும் கிடைக்கவில்லை. ஆயினும் தற்போதைய ஜனாதிபதியின் குறித்த பேச்சு தமிழ் இனத்தை ஆசுவாசப்படுத்தும் வகையில் அமைந்துள்ளது.

தான் இவ்வாறு பேசினால் அதன் விளைவு தெற்கில் எவ்வாறு இருக்கும் எனத் தெரிந்திருந்தும் ஜனாதிபதி நியாயத்தின் பக்கம் நிற்கிறார் எனின் தமிழினத்திற்கு தீர்வை வழங்கும் எண்ணம் அவரிடம் உண்டு என்றே பொருள்.

அவர் ஜனாதிபதியாக பதவியேற்றதன் பின் பல தடவைகள் தமிழர் பிரச்சினையைத் தீர்ப்பேன் எனக் கூறியிருக்கிறார்.

குறித்த ஜனாதிபதியின் செயலினால் அவரிற்கு தெற்கில் எதிர்ப்புகள் எழ ஆரம்பித்துள்ளன. அவர் தமிழினத்தின் வாக்குகளைப் பெறவே இவ்வாறு செயற்படுகிறார் எனவும் குற்றம் சாட்டப்பட்டுள்ளது. அத்துடன் அவரின் ஆட்சியை முடிவுறுத்தும் செயற்பாடுகளும் திரைமறைவில் முடுக்கிவிடப்பட்டிருப்பதும் புலப்படுகிறது.

இதற்கு பொதுஜன பெரமுனவின் ஜனாதிபதியுடனான முரண்பாட்டைச் சுட்டிக்காட்டலாம்.

ஜனாதிபதி ஆட்சி அதிகாரங்களைத் தொடர வேண்டும் என்றால் எமது (பெரமுனவின்) ஆதரவு தேவை என நாமல் ராஜபக்ஷ தெரிவித்திருந்ததும் பெரமுன கட்சி விவகாரங்களில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலையிடக்கூடாது என பசில் ராஜபக்ஷ பகிரங்கமாக எச்சரிக்கை விடுத்ததையும் சுட்டிக்காட்ட முடியும்.

தமிழர்களுக்காக பரிந்து பேசும் ரணில் மீது கோபம் கொள்வதால் இழந்த ஆட்சியை மீண்டும் பிடித்து விடலாம் என ராஜயக்ஷக்கள் எத்தணிப்பதும் இங்கு புலப்பட்டு நிற்கின்றது.

குறித்த ஜனாதிபதியின் எதிர்ப்புடன் தமிழர் காணிகள் கபளீகரம் செய்யும் செயற்பாடுகள் நிறுத்தப்படும் என்பது பொய்யானது.

ஏனெனில் தமிழர்கள் பூர்வீகங்களை அபகரித்து அதில் பௌத்தத்தை திணிக்கும் செயற்பாடுகள் திரை மறைவில் பூதாகரமாக செயற்படுத்தப்பட்டுக் கொண்டிருக்கிறது.

இதை தடுக்க வேண்டும் எனின் அதற்கான உபயம் பௌத்த தேரர்களிடமே உண்டு. ஆனால் அந்த உபயத்தை அவர்கள் சரியாக கையாள்வார்களா என்பதுதான் சந்தேகத்துக்குரியது.

எது எவ்வாறோ தமிழர் பூர்வீகங்கள் சுவீகரிக்கப்பட்டு வரலாற்றைப் புனையும் செயற்றிட்டம் நிறுத்தப்பட வேண்டும்.

இல்லையேல் இன்னும் பத்து வருடங்களில் வடக்கு-கிழக்கு முழுமையாக பௌத்த மயமாகி விடும் என்பதில் சந்தேகமில்லை.

– அபிமன்யு –

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆலடி மாநாடு

**வாத்தியார்** வைத்திலிங்கம் தலைமையில் ஆலடி மாநாடு கூடியது. மாநாட்டு உறுப்பினர்கள் அனைவரும் ஆலடிக்கு வந்திருந்தனர். இறைவணக்கத்துடன் ஆலடி மாநாட்டை ஆரம்பிப்பம் என்று வாத்தியார் கூற, அனைவரும் எழுந்து நின்று இறைவணக்கம் செலுத்தி அமர்ந்தனர்.

தொடர்ந்து பண்டிதர் பரமலிங்கம் எழுந்தார். நல்லூர் பிரதேச சபையின் உறுப்பினராக இருந்த, ஓய்வுநிலை கிராம உத்தியோகத்தர் இராசையா இராசலிங்கம் அவர்கள் காலமாகிவிட்டார் என்ற செய்தியறிந்து மிகுந்த வேதனையடைகின்றோம். கொக்குவில்-தாவடியைச் சேர்ந்த இராசலிங்கம் அவர்கள் சமூக நலனில் அதீத ஈடுபாடு கொண்டவர்.

அவருக்கு இரண்டு நிமிட மௌன அஞ்சலி செலுத்துவோம் எனக் கூற, அனைவரும் எழுந்து நின்று இரண்டு நிமிட மௌன அஞ்சலி செலுத்தி அமர்ந்தனர்.

தொடர்ந்து ஆலடியில் அமைதி நிலவியது. அமைதியைக் குலைக்க விதானையார் விசுவலிங்கம் குரல்கொடுத்தார்.

**விதானையார்:-** அது சரி, கீரிமலை தீர்த்தக் கரையைச் சீரமைத்து பிதிர்க்கடன் செய்வதற்கு உதவ வேணும் எண்டு கடந்த 15 ஆம் திகதி வலம்புரி ஆசிரியர் தலையங்கம் எழுதப்பட்டிருந்தது.

இது தொடர்பில வடக்கு மாகாண ஆளுநர் ஏதேனும் நடவடிக்கை எடுப்பாரோ.

**கங்காணி:-** இந்த நாட்டில சைவ சமயத்திற்கு உரிய மதிப்பு வழங்கப்படுவதில்லை. அதேநேரம் சைவ சமயம் சார்ந்த அரசியல்வாதிகள் தங்கட அரசியல் உழைப்பிற்காக சைவ சமயத்திற்கு நடக்கிற நிந்தையை வெளிப்படுத்துறதுக்கும் தயாரில்லை.

**வாத்தியார்:-** அதெண்டால் உண்மைதான். ஆனால் என்னைப் பொறுத்தவரை இந்தியாவின் பிரதமராக மோடி இருக்கும் போதுதான் இலங்கையில சைவ சமயத்திற்கான கௌரவத்தையும் பாதுகாப்பையும் உறுதி செய்ய முடியும்.

**சாத்திரியார்:-** அதெங்க நடக்கப்போகுது. எங்கட தமிழ் அரசியல்வாதிகள் ஒருபோதும் பிரதமர் மோடியைச் சந்தித்து எங்கட பிரச்சினைகளைத் தீர்க்குமாறு கேட்க மாட்டினம்.

**சிறாப்பர்:-** ஓ! இப்ப எங்கட தமிழ் அரசியல்வாதிகளில் ஒரு தரப்பினர் அமெரிக்க விசுவாசிகளாகத்தானே இருக்கினம்.

**சாத்திரியார்:-** அமெரிக்க விசுவாசிகள் எண்டு சொல்லாதீங்க, அமெரிக்கா போடுற கோட்டில நடக்கிறவையள் எண்டு சொல்லுவதுதான் சரி.

**பண்டிதர்:-** கீரிமலை புனித தீர்த்தக் கரையைச் சீரமைக்க வேணும் என்பது எவ்வளவுக்கு அவசியமானதோ! அந்தளவுக்கு கீரிமலையில் பிதிர்க்கடனுக்காகச் செய்யப்படுகின்ற கிரியைகளிலும் ஒழுங்குபடுத்தல்கள் செய்யப்பட வேணும்.

**சாத்திரியார்:-** என்ன வாத்தியார் சொல்லுறியள்

**வாத்தியார்:-** ஏன்? சாத்திரியார் நீங்கள் கீரிமலையில பிதிர்க்கடன் செய்கிற மண்டபத்துக்கு போனதில்லையோ. அங்க பாத்தியள் எண்டால், அலமலக்காக அபரக் கிரியைகள் நடக்கிறதைப் பார்க்கலாம்.

ஒரு தேங்காயைத் தான் திரும்பத் திரும்பக் கும்பத்தில வைப்பினம்.

உண்மையில ஒரு அந்தியேட்டி நடந்தால், அந்த இடத்தைக் கழுவிச் சுத்தம் செய்த பின்பு தான் அடுத்த அந்தியேட்டி செய்ய வேணும்.

அது தவிர, தோரணம், கோலம் எல்லாம் புதிதாகப்போட வேணும். ஆனால் அங்க நடக்கிறதைப் பார்த்தால் என்னெண்டு அந்த ஆத்மாக்கள் சாந்தியடைய முடியும்.

**விதானையார்:-** நீங்கள் இதைச் சொல்லுறியள். உண்மையில ஒரு சிவாச்சாரியர் எந்தக் கிரியையைச் செய்வதாக இருந்தாலும் புது வஸ்திரம் அணிந்துதான் கிரியையைச் செய்ய வேணும். அதற்காகத்தான் புது வேட்டி சால்வையை சிவாச்சாரியருக்குக் கொடுக்கிறது.

ஆனால் அந்த வஸ்திரங்களை அணியாமல், அதனை அப்படியே தங்கட பைக்குள்ள வைச்சுப்போடுவினம். பிறகென்ன அது திரும்பவும் புடவைக் கடைக்கு விற்பனைக்குப் போகும்.

**சாத்திரியார்:-** இதென்ன நாசமறுப்பு. அந்தியேட்டியில தானம் கொடுத்த வேட்டி சால்வை மீளவும் விற்பனைக்கு வருமோ.

**சிறாப்பர்:-** இதுகளில சிவாச்சாரியர்களை மட்டும் நாங்கள் குறை சொல்லக்கூடாது. எங்கட ஆட்களும் எதையும் கடமைக்குச் செய்யிறதே தவிர, அதன் உட்பொருள் உணர்ந்து செய்யிறதில்லை. ஏதோ இறந்தவருக்கு அந்தியேட்டி செய்ய வேணும். ஆனால் இறந்து எத்தனையாவது நாளில செய்ய வேணும் எண்டு எதுவும் கிடையாது.

மீண்டும் வெளிநாட்டுக்குப் போக வேணும் எண்டதற்காக 15 ஆம் நாள், 20 ஆம் நாள் எண்டு தங்கட வசதிக்கேற்ப அந்தியேட்டியைச் செய்யினம்.

உண்மையில அபரக் கிரியைக்கு ஒதுக்கப்பட்ட நாள், மாதம், ஆண்டு, திதி என்பன ஞானிகளால் கணிக்கப்பட்டவை. அதில மாற்றம் செய்யக்கூடாது. ஆனால் இப்ப எங்கட சிவச்சாரியர்களும் எல்லாத்திற்கும் ஓம் எண்டு சொல்லுகினம்.

**கங்காணி:-** அதுமட்டுமல்ல சிறாப்பர், இறந்தவர் தொடர்பில செய்யப்படும் அந்தியேட்டிக் கிரியைக்குத் தேவையான உணவுப்பண்டங்களைக் கூட வீடுகளில செய்யிறதுக்கு நாங்கள் தயாரில்லை.

எல்லாத்துக்கும் காசைக் கட்டி விடுகிற அநியாயம் நடக்குது.

**வாத்தியார்:-** சரி.. சரி.. நாங்கள் கதைத்து ஏதும் நடக்கப் போறதில்லை. அதேநேரம் விதிமுறைகளுக்கு அமையாத அபரக் கிரியைகளாலும் ஆத்ம சாந்திக்கு இடமில்லை. ஆகையால அபரக்கிரியை செய்கிற சிவாச்சாரியர்கள் கடவுளுக்குக் கணக்குக் கொடுக்கிற மாதிரியாகத் தங்கட கடமையைச் செய்ய வேணும்.

எல்லாத்திலும் உழைப்பு, வருமானம் எண்டால் ஆத்மாக்கள் சாபம் தான் போடுவினம். இவ்வாறு வாத்தியார் கூறியதும் ஆலடியில் சிறிது நேரம் நிசப்தம் நிலவியது. நிசப்தத்தைக் குலைக்க பண்டிதர் குரல் கொடுத்தார்.

**பண்டிதர்:-** இப்ப எல்லாம் செப்புடிவித்தைதான் நடக்குது. முன்பெல்லாம் ஒருவர் இறந்து விட்டால், அந்த ஊர் கூடும், உறவினர்கள் கூடுவினம். இறந்தவரின்ர குடும்பத்திற்கு உதவியும் ஆறுதலும் வழங்குவினம். ஆனால் இப்ப செத்த வீடு நடக்கிறதே தெரியாமல் இருக்குது. சனங்கள் எவரும் இல்லை. இறுதி ஊர்வலமும் அந்தியாகால சேவையின்ர உதவியால ஒரு மாதிரியாக நடந்து முடியுது.

**மூப்பர்:-** விதானையார் சொல்லுறது முற்றிலும்சரி. ஆனால் பெரும்பாலும் இப்படியான நிலைமை படித்த-உத்தியோகம் பார்த்த-ஆரம்ப காலத்துப் பணக்காரக் குடும்பங்களில தான் நடக்குது. மற்றும்படி கிராமங்களில மரணச் சடங்கு என்பது ஊர் கூடி நடக்குது.

**மூப்பர்:-** அது சரி, பருத்தித்துறை மந்திகை வைத்தியசாலையில மருத்துவக் கழிவுகளை அகற்றுவதற்கு இன்னமும் ஒரு வழி ஏற்படுகுது இல்லைப் போல.


**கங்காணி:-** ஏன் மூப்பர் என்ன சங்கதி.

**மூப்பர்:-** மந்திகை வைத்தியசாலையில மருத்துவக் கழிவுகளை அந்த வைத்தியசாலை வளாகத்தில வைத்து எரியூட்டுவதால, MOH அலுவலகத்தில இருக்கிறவையள் அங்க இருக்க முடியாமல் அந்தரப்படுகினம். அதால தங்களுக்கு உடல் உபாதை ஏற்படும் எண்டு பயப்படுகினம்.

**கங்காணி:-** அது சரிதானே. மருத்துவக் கழிவுகளை முறையாக எரியூட்ட வேணும். இதை விட்டிட்டு நிலத்தில போட்டு எரித்தால் அது மனிதர்களுக்குத் தீங்காகத்தான் முடியும்.


இவ்வாறு கங்காணியார் கூற, அந்நேரம் பார்த்து ஆலடிப் பிள்ளையார் கோவில் கண்டாமணியும் ஒலிக்க, ஆலடியில் இருந்தவர்கள் எழுந்து கோவிலுக்குச் சென்றனர்.

**ஆதித்தன்**



## மந்திகை வைத்தியசாலையில எரியூட்டப்படும் மருத்துவக் கழிவுகள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



உடற்பயிற்சி, ஆரோக்கியமான உணவு மாணவர்களிடம் கேள்விக் குறியாகி விட்டதா?






உலகை அழித்துக் கொண்டிருக்கும் பிளாஸ்ரிக் பாவனையைக் கட்டுப்படுத்த ஏதும் வழி உண்டா வியாசரே?

**ராதுகை — வன்னி**

**நம்பிக்கைத் துரோகம் செய்யும் நண்பர்கள் பற்றிக் கூறுங்கள் வியாசரே?**

இந்த உலகில் அப்பளுக்கற்ற அன்பு, உண்மை, நேர்மை என்பன எவ்வாறு நின்று நிலைக்கின்றதோ அவ்வாறே நம்பிக்கைத் துரோகமும் நிலைத்து நிற்கிறது.
ஏனென்றால் யார் எப்போது எப்படி மாறுவார்கள் என்பதை கணிக்கவே முடியாது.
நம்பிக்கைத் துரோகம் செய்பவர்கள் யார் என்று பார்த்தால் ஒரு காலத்தில் எமக்கு விசுவாசமாக இருந்தவர்களாகத்தான் இருக்கும்.
ஏனெனில் ஏதோவொரு காரணி அவர்கள் நேர்மையை நிலைகுலைய வைத்திருக்கிறது.
அது பொன்னாகவோ, பொருளாகவோ, பெண்ணாகவோ, புகழாகவோ இருக்கும்.
இறுதியில் மண்ணாவது புரியாத மனிதன் ஆடும் ஆட்டம் கொஞ்ச நஞ்சமல்லவே.

**சுதன் — குப்பிழான்**

**இனப்பிரச்சினைக்கான தீர்வும் இல்லை. இனப்படுகொலைக்கான தீர்வும் இல்லை. தமிழினம் இனி என்ன செய்யும்?**

இங்கு நாம் ஒரு விடயத்தைப் புரிந்து கொள்ள வேண்டும். அதாவது தமிழினத்துடன் ஒப்பிடுகையில் தென்னிலங்கை அரசியல்வாதிகள் மிக ஒற்றுமையானவர்கள்.
தற்போது கூட தொல்பொருள் திணைக்களத்தின் தமிழினத்தின் ஆக்கிரமிப்புக் குறித்து ரணில் கடுமையாகக் கதைக்க அனைவரும் ரணிலுக்கு எதிராக ஒன்று சேர்ந்து விட்டார்கள்.
இதேபோன்ற ஒற்றுமை எம் தமிழ் அரசியல் தளத்தில் இல்லை என்பது தான் வேதனை.
தமிழினத்துக்கான அரசியல் தீர்வோ, இனப்படுகொலைக்கான தீர்வோ எமக்கு கிடைக்கப் போவதில்லை என்பது மட்டும் உண்மை.
நாம் காலம் காலமாக இவர்களுக்கு அடிமையாய் கிடப்பது தான் எமது தலைவிதி.

**மதுவன் — மீசாலை**

**தமிழ்ப் பாராளுமன்ற உறுப்பினர்கள் வாய் திறந்தால் சிறையில் அடையுங்கள் என்கிறாரே வீரசேகர?**

பாரிய இனத்து வேசம், மதத்துவேசம் கொண்டவர் சரத் வீரசேகர.
அவர் எதைப் பேசினாலும் அது தமிழ் மக்களுக்கு எதிரான பேச்சாகவே இருக்கும்.
அதிலும் விடுதலைப் போராட்டம் குறித்து அவர் பேசும் பேச்சுக்கள் மிக வன்மத்தைத் தூண்டுவதாக அமைந்திருக்கும்.
இவ்வாறானவர்கள் பெரும்பான்மை அரசியல் தளத்தில் இருக்கும் வரை தமிழினத்தின் பிரச்சினை தீரும் என யாரும் கனவு காணக் கூட முடியாது.
ஆனால் ஒன்று மட்டும் உண்மை. தமிழினத்திற்கு யார் யார் துரோகம் இழைக்கிறார்களோ அவர்களின் இறுதி நிமிடங்கள் மிகக் கொடுமையானதாயே அமையும்.

அன்பு வாசகர்களே! உங்கள் எண்ணத்தில் தோன்றிய கேள்விகளை **076 097 3126** என்ற இலக்கத்திற்கு SMS செய்யுங்கள்

**சி.சுரேசன் — பத்தமேனி**

**உலகை அழித்துக் கொண்டிருக்கும் பிளாஸ்ரிக் பாவனையைக் கட்டுப்படுத்த ஏதும் வழி உண்டா வியாசரே?**

மனிதனால் தயாரிக்கப்பட்ட பிளாஸ்ரிக் என்ற அரக்கன் மனிதனை அழித்துக் கொண்டிருக்கிறது.
அதை ஒழிக்க முடியாமல் மனிதன் திகைத்துக் கொண்டிருக்கிறான்.
பிளாஸ்ரிக்கை அழிப்பதற்கு பல தீர்வுகள் உண்டு. அதை நடைமுறைப்படுத்துவதற்கு நாம் தான் முன்வர வேண்டும்.
அதாவது உணவுப்பொதியிடலுக்கு வாழை இலை, பொருட்கொள்வனவிற்கு துணிப்பை, குளிர்பானங்களுக்கு கண்ணாடிப்போத்தல் போன்றவற்றைப் பயன்படுத்தினாலே போதும் ஓரளவு பிளாஸ்ரிக்கை கட்டுப்படுத்தி விடலாம்.
ஏனென்றால் மேற்குறித்த மூன்று விடயத்திற்கும் பயன்படுத்தும் பிளாஸ்ரிக் பாவனை உலகளவில் மிக மிக அதிகம்.

**தருஷ் — வதிரி**

**மாமி -மருமகள் சண்டைக்குள் அகப்பட்ட அனுபவம் உண்டோ வியாசருக்கு?**

மாமியாரும் மருமகளும் கடும் சண்டை யிடும் போது அம்மா பக்கமும் நிற்காமல் மனைவி பக்கமும் நிற்காமல் ஒரு ஓரமாய் பீரோ பக்கமாய் நிற்பதே நல்ல கணவனுக்கு அழகு என எங்கேயோ படித்த ஞாபகம்.
இந்த இரண்டில் எந்தப்பக்கம் நாம் நின்றாலும் நமக்குத்தான் ஆபத்து.
அதனால் பீரோ பக்கம் நிற்பதே மேல்.

**வைரமுத்து — கொக்குவில்**

**அன்பின் வியாசரே திறமை உள்ளவரை ஊடகங்கள் கண்டுகொள்வதில்லையே ஏன்?**

திறமை என்பது எது என வரையறை செய்வது இதில் முக்கியத்துவம் பெறுகின்றது வைரமுத்து.
அதாவது ஒருவருக்கு திறன் இருக்கிறது என்பதை எவ்வாறான அளவுகோல் கொண்டு அளக்கப்படுகிறது.
எனக்குத் தெரிந்து வெறும் கல்வி அறிவு மட்டும் அறிவாகி விடாது என்பதே உண்மை.
இதற்கு நல்ல உதாரணம் நீச்சல் போட்டிக்கான எழுத்துப் பரீட்சையில் அதி சிறந்த சித்தியைப் பெற்ற X. கிணற்றுக்குள் வீழ்ந்து பரிதாபமாக மரணமடைந்தார்.
உங்கள் கேள்வியின் முரணை நீங்களே கண்டுபிடியுங்களேன்.

**ராஜன் — பருத்தித்துறை**

**அன்பு நிறைந்த வியாசரே நம் மாணவர் சமூகம் எதனை நோக்கிச் சென்று கொண்டிருக்கிறது?**

தற்போதைய மாணவர்களிடம் வன்முறை உணர்வு அதிகரித்து விட்டது. இது மாணவர் சமூகத்திற்கு ஆரோக்கியமானதல்ல.
அண்மையில் வவுனியாவில் சக மாணவனை மாணவர்கள் ஒன்றிணைந்து கடுமை யாகத் தாக்கியது மட்டுமின்றி அதை காணொளியாக எடுத்து சமூக வலைத்தளத்தில் பதிவிட்டிருக்கிறார்கள்.
யாழ்.பல்கலைக்கழகத்தில் இரு பிரிவு மாணவர்களிடம் ஏற்பட்ட முரண்பாடு கை கலப்பில் முடிவடைந்தது.
இவ்வாறு எம் மாணவ சமூகத்திடம் வன் முறை உணர்வு அதிகரித்துச் செல்கிறது.
இதைத் தடுப்பதற்கு நாம் என்ன செய்கின்றோம் தெரியுமா அவர்களுக்கு தண் டனை வழங்குகின்றோம்.
மாணவர்களுக்குத் தண்டனை வழங்கினால் அதன் தாக்கம் மிகத் தீவிரமாகவே இருக்கும்.

**திகான் — வடமராட்சி**

**உடற்பயிற்சி, ஆரோக்கியமான உணவு மாணவர்களிடம் கேள்விக் குறியாகி விட்டதா?**

தற்போது மாணவர்களிடத்தே ஆரோக்கியம் பேணல் என்பது இம்மியும் இல்லாது போய் விட்டது.
மைதானத்தில் இறங்கி பிள்ளை விளையாடுவதை எந்தப் பெற்றோரும் விரும்புவதில்லை. விளையாடினால் அது பிள்ளையின் படிப்பைப் பாதித்துவிடும் என்ற தவறான அபிப்பிராயமே இதற்குக் காரணம்.
இது பிள்ளைகளின் உடல், உள ஆரோக்கியத்தைப் பாதிப்பதுடன் அவர்களை வெறும் புத்தகப் பூச்சிகளாக மாற்றிவிடும்.
சூம் வகுப்புக்கள் ஆரம்பித்த பின்னர் கண்ணாடி அணியும் மாணவர்களின் எண்ணிக்கை சடுதியாக அதிகரித்து விட்டது. இதுவும் மாணவர் ஆரோக்கியத்தைப் பாதித்திருக்கிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## காலத்தால் அழியாத கானங்கள்

**படம் : இதய கோவில்**
**இசை : இளையராஜா**
**பாடலாசிரியர்: இளையராஜா**
**பாடியவர்கள் : பாலசுப்பிரமணியம், எஸ்.ஜானகி**



இதயம் ஒரு கோவில்
அதில் உதயம் ஒரு பாடல்

இதயம் ஒரு கோவில்
அதில் உதயம் ஒரு பாடல்
இதில் வாழும் தேவி நீ
இசையை மலராய் நானும் சூட்டுவேன்
இசையை மலராய் நானும் சூட்டுவேன்

இதயம் ஒரு கோவில் ..

உயிரின் ஜீவ நாடிதான் நாதம் தாளம் ஆனதே
உயிரில் கலந்து பாடும்போது எதுவும் பாடலே
பாடல்கள் ஒரு கோடி எதுவும் புதிதில்லை
ராகங்கள் கோடி கோடி எதுவும் புதிதில்லை
எனது ஜீவன் நீ தான் என்றும் புதிது

இதயம் ஒரு கோவில்
அதில் உதயம் ஒரு பாடல்
இதில் வாழும் தேவி நீ
இசையை மலராய் நானும் சூட்டுவேன்

இதயம் ஒரு கோவில்...
காமம் தேடும் உலகிலே கீதம் என்னும் தீபத்தால்
ராம நாமம் மீதிலே நாதத் தியாகராஜரும்
ஊனை உருக்கி உயிரில் விளக்கு ஏற்றினாரம்மா
அவர் பாடலின் ஜீவன் அதுவே அவரானார்
என் பாடலின் ஜீவன் எதுவோ அது நீயே
நீயும் நானும் ஒன்று தான் எங்கே பிரிவது

இதயம் ஒரு கோவில்.....

நீயும் நானும் போவது காதல் என்ற பாதையில்
சேரும் நேரம் வந்தது மீதித் தூரம் பாதியில்
பாதை ஒன்று ஆனபோதும் திசைகள் வேறம்மா
உனது பாதை வேறு எனது பாதை வேறம்மா
மீராவின் கண்ணன் மீராவிடமே
எனதாருயிர் ஜீவன் எனை ஆண்டாளே
வாழ்க என்றும் வளமுடன் என்றும் வாழ்கவே

இதயம் ஒரு கோவில்
அதில் உதயம் ஒரு பாடல்
இதில் வாழும் தேவி நீ
இசையை மலராய் நானும் சூட்டுவேன்

# இலங்கையின் வளர்ச்சிக்கு இந்தியாவின் உறுதுணை

இலங்கையின் தற்போதைய நிலையானது 1990 களில் இந்தியாவின் அனுபவத்தை நினைவுபடுத்துகிறது. இருப்பினும் இந்தியாவால் நிலைமையை சீர்செய்ய முடிந்தது. 1991 ஆம் ஆண்டு காலப்பகுதியில் இந்தியா, இறையாண்மை இயல்புநிலையின் விளிம்புக்கு சென்றது. வளைகுடாப் போர் காரணமாக வெளிநாடுகளில் உள்ள இந்தியத் தொழிலாளர்கள் பணம் அனுப்புவதில் சரிவு ஏற்பட்டது. இதனால் நிலைமை மேலும் மோசமடையச் செய்தது. இந்தியாவின் அந்நியச் செலாவணி கையிருப்பு சரிந்து 6 பில்லியன் டொலருக்கும் குறைவான அளவை எட்டியது. இந்தத் தொகையானது நாட்டின் இறக்குமதித் தேவைகளில் சுமார் இரண்டு வாரங்களுக்கு மாத்திரமே போதுமானதாக இருந்தது.

எவ்வாறாயினும், 1991 பொருளாதார நெருக்கடியிலிருந்து மீள்வதற்கு இந்தியா கடுமையாக போராடியது. இந்தக் காலகட்டமானது தொடர்ச்சியான, மாற்றத்தக்க பொருளாதார சீர்திருத்தங்களுக்கும் வழிவகுத்தது. இந்த பொருளாதார நெருக்கடியானது, ஆழமான வேரூன்றிய கட்டமைப்புச் சிக்கல்களைத் தீர்ப்புதற்கும் தைரியமான கொள்கை மாற்றங்களைச் செயற்படுத்துவதற்கும் கூட காரணமாகியது.

இதன் விளைவாக, இன்று, இந்தியப் பொருளாதாரம் தொடர்ந்து சிறப்பாகச் செயற்பட்டு, வேகமாக வளர்ந்து வரும் ஆசியப் பொருளாதாரமாகவும் உலகில் வேகமாக வளரும் நாடுகளில் ஒன்றாகவும் உள்ளது.

நிதி அமைச்சின் அறிக்கையின் பிரகாரம், கடந்த மூன்று ஆண்டுகளில் பொதுத்துறை மூலதனச் செலவினங்களில் குறிப்பிடத்தக்க அதிகரிப்பு ஏற்பட்டுள்ளது. இது மொத்த நிலையான மூலதன உருவாக்கத்தில் தொற்றுநோய்க்கு முந்தைய போக்குப் பாதையை விஞ்சுவதற்கு பங்களிக்கிறது.

இருப்பினும், நிபுணர்கள் தனியார் நுகர்வு பற்றி கவலைகளை எழுப்பியுள்ளனர். மதிப்பீட்டு நிறுவனத்தின் பகுப்பாய்வில், பணவீக்கம் குறையும் என்று எதிர்பார்க்கப்பட்டாலும் தற்போதைய நுகர்வுத் தேவை, முக்கியமாக இந்தியாவில் உள்ள உயர்-வருமானப் பிரிவைச் சேர்ந்த குடும்பங்களால் நுகரப்படும் பொருட்கள் மற்றும் சேவைகளை நோக்கி பெரிதும் சாய்ந்துள்ளது. பரந்த அடிப்படையிலான நுகர்வு மீட்பு இன்னும் கணிசமான தூரத்தில் உள்ளது என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்தியா சந்தித்த பொருளாதார நெருக்கடியை போன்று இலங்கை தற்போது எதிர்கொண்டுள்ள பொருளாதார நெருக்கடியிலிருந்து மீள்வதற்கு போராடி வருகின்றது. கொழும்பு வடக்கு துறைமுக 30 வருட அபிவிருத்தித் திட்டத்தில் உரையாற்றிய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, இந்தியாவின் சனத்தொகை அதிகரிப்பு மற்றும் கைத்தொழில்மயமாக்கல் தொடர்பில் தனது கருத்தை வெளிப்படுத்தினார். இந்தியா உலகின் அதிக மக்கள்தொகை கொண்ட நாடாக மாறி, விரைவான தொழில்மயமாதலை அனுபவித்து வருவதால், இலங்கை இந்த வளர்ச்சியைப் பயன்படுத்தினால் பிராந்தியத்தில் வான் மற்றும் கடல் மையமாக மாற முடியும் என்று அவர் குறிப்பிட்டார்.

குஜராத், மகாராஷ்டிரா மற்றும் தமிழ்நாடு போன்ற மாநிலங்களில் தொழில்மயமாக்கல் வேகமாக முன்னேறி வருவதால், 2050 ஆம் ஆண்டில் இந்தியாவின் மக்கள் தொகை 1.7 பில்லியனை எட்டும் என்று ஜனாதிபதி விக்கிரமசிங்க குறிப்பிட்டார். 2010 இல் சீனாவின் முன்னேற்றத்துடன் ஒப்பிடுகையில் இந்தியாவின் தொழில்மயமாக்கல் அதன் ஆரம்ப கட்டத்தில் இருக்கும் போது, அது எண்கணிதத்தை விட வடிவியல் வேகத்தில் முன்னேறும் என்று எதிர்பார்க்கப்படுகிறது என்று அவர் குறிப்பிட்டார். எதிர்காலத்தில் இந்தியாவின் தொழில்மயமாக்கல் மற்ற பிராந்தியங்களுக்கும் விரிவடையும் போது இது இலங்கைக்கு சாத்தியமான வாய்ப்புகளை வழங்கும் என்றார்.

இந்தியாவின் அபிவிருத்தி மற்றும் இந்தியாவிற்கும் இலங்கைக்கும் இடையிலான தொடர்பைப் புரிந்து கொள்வதன் முக்கியத்துவத்தை ஜனாதிபதி விக்கிரமசிங்க மேலும் வலியுறுத்தினார். கொழும்பு துறைமுகத்தின் வடக்கு முனையத்தில் நிரந்தர கட்டமைப்புகளின் தேவை கொழும்பு துறைமுகத்தின் நம்பகத்தன்மையை தீர்மானிக்கும். எந்தவொரு கட்டுமானத் திட்டங்களையும் ஆரம்பிப்பதற்கு முன்னர், உள்ளூர் மக்களின் ஆதரவு மிகவும் முக்கியமானது என்பதால், சுற்றாடல் தாக்கம், குறிப்பாக மீனவச் சமூகங்களுக்கு ஏற்படும் பாதிப்புகளை கருத்தில் கொள்ள வேண்டியதன் அவசியத்தையும் ஜனாதிபதி வலியுறுத்தினார்.

அடுத்த 25 வருடங்களுக்குள் இலங்கையை ஒரு கேந்திர நிலையமாகவும் அபிவிருத்தியடைந்த நாடாகவும் மாற்றும் பயணத்தில், இந்தியா மற்றும் பங்களாதேஷ், ஈரான் மற்றும் பரந்த பிராந்தியத்தின் அபிவிருத்திகளையும் ஆராய்வதன் முக்கியத்துவத்தை ஜனாதிபதி எடுத்துரைத்தார். இந்தியா, பங்களாதேஷ், மலேசியா மற்றும் மியான்மர் ஆகிய நாடுகளை உள்ளடக்கிய அடுத்த 25 ஆண்டுகளில் வங்காள விரிகுடாவில் எதிர்பார்க்கப்படும் கணிசமான வளர்ச்சியை கருத்தில் கொண்டு, திருகோணமலை துறைமுகத்தை மேம்படுத்துவது தொடர்பாக இந்தியாவுடன் கலந்துரையாடல்கள் நடந்து வருகின்றன. திருகோணமலைத் துறைமுகம் வங்காள விரிகுடாவில் உல்லாச சுற்றுலா மையமாக செயற்படுவதற்கான சாத்தியக்கூறுகளையும் ஜனாதிபதி எடுத்துரைத்தார்.

போக்குவரத்து அலகுகள் மற்றும் கொள்கலன்களின் எண்ணிக்கை போன்ற உட்கட்டமைப்பு வசதிகள், திறன் மற்றும் உட்கட்டமைப்பு தேவைகளை இது தீர்மானிக்கும் என்பதால், இந்தியாவின் வளர்ச்சிகளை கருத்தில் கொள்ள வேண்டியதன் அவசியத்தை ரணில் விக்கிரமசிங்க வலியுறுத்தினார். இந்தியாவைப் பொறுத்தவரை நேர்மறையான கண்ணோட்டம் உள்ளது. ஆனால் அதைச் செயற்படுத்துவது வெற்றிகரமாக செயற்படுத்தப்படுவதைப் பொறுத்தது என்று அவர் குறிப்பிட்டார்.

சரிவின் விளிம்பில் இருந்து போட்டி ஏற்றுமதிகளை நிறுவுவதற்கான இந்தியாவின் பாதை ஒரு சவாலான மற்றும் விரிவான பயணமாக உள்ளது. அதேபோன்று, இலங்கை தனது பொருளாதாரத்தை புத்துயிர் பெறுவதற்கான காலக்கெடு நிச்சயமற்றதாகவே உள்ளது. எனவே இலங்கை தனது பொருளாதாரத்தை மாற்றியமைக்க, இந்த பிரச்சினைகளுக்குத் தீர்வு காண வேண்டும். அத்துடன் பயனுள்ள கொள்கைகள் மற்றும் சீர்திருத்தங்களை செயற்படுத்த வேண்டும். இது நிதி ஒருங்கிணைப்பு, வெளிநாட்டு முதலீட்டை ஈர்த்தல், பொருளாதாரத்தை பல்வகைப்படுத்துதல், உட்கட்டமைப்பை மேம்படுத்துதல், புதுமைகளை ஊக்குவித்தல் மற்றும் சாதகமான வணிகச் சூழலை வளர்ப்பது போன்ற நடவடிக்கைகளை உள்ளடக்கியதாக இருத்தல் வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மீண்டெழுந்தவர்கள்!



வெற்றியை நோக்கிச் செல்லும் ஒவ்வொருவர் வாழ்விலும் பல தடைகள் குறுக்கிடும். அவ்வாறு குறுக்கிட்ட சோதனைகளைக் கடந்து வெற்றி பெற்ற சில விளையாட்டு வீரர்களை இங்கே பார்க்கலாம். தன்னம்பிக்கை தேவைப்படும் போது இவர்களை நினைத்துக் கொள்ளுங்கள்!

### ஆர்தர் ஆஷ்

மூன்று 'கிராண்ட் ஸ்லாம்' வென்றவர். அமெரிக்க டேவிஸ் கோப்பை அணியில் இடம்பிடித்த முதல் கறுப்பின வீரர். 1979 இல் மாரடைப்பு ஏற்பட, பைபாஸ் செய்து மீண்டார். மீண்டும் வலி வர இன்னொரு சர்ஜரியும் செய்தார். மீண்டெழும் தருணத்தில் அவருக்கு எச்.ஐ.வி இருப்பதும் உறுதியானது. இதய சிகிச்சையின் போது ஏற்றப்பட்ட இரத்தம் வழியாக எச்.ஐ.வி தொற்றியிருந்தது. தன் நிலையை பகிரங்கமாக அறிவித்து விட்டு நோய்க்கான விழிப்புணர்வை மனம் தளராமல் செய்தார்.



### முகமது அலி

இரண்டு முறை ஹெவி வெயிட் சம்பியன். ஒரே குத்தில் எதிராளிகளை வீழ்த்தும் சாகசக்காரர். தொடர்ச்சியாகத் தலையில் அவர் வாங்கிய அடிகளால் 1984 இல் மத்திய நரம்பு மண்டலத்தை பாதிக்கும் பார்கின்சன் நோய் வீழ்த்தப் பார்த்தது. இதனால் அவர் விளையாட்டில் முடங்கினாலும் 'I'M THE GREATEST!' என்று மார்தட்டி பல்வேறு நிதி திரட்டல்கள் மூலம் எளியவர்களுக்கு உதவினார். இந்த நோய் ஆராய்ச்சிக்காக 1997 இல் பார்கின்சன் மையத்தையும் நிறுவினார்.



### மார்ட்டினா நவ்ரத்திலாவோ

80களில் டென்னிஸ் உலகின் தலைசிறந்த வீராங்கனை. இதுவரை 59 கிராண்ட்ஸ்லாம் வென்றிருக்கிறார். டென்னிஸில் அதிக முறை தனிநபர் மற்றும் இரட்டையர் பட்டங்களை வென்ற சாதனைக்குரிய இவர் 2010 இல் மார்பகப் புற்றுநோயால் பாதிக்கப்பட்டு அதிலும் வென்று இயல்பு நிலைக்குத் திரும்பினார். தற்போது தொண்டை மற்றும் மார்பகப் புற்றுநோயால் மீண்டும் பாதிக்கப்பட்டுள்ள இவர், "போராடி இந்த நோயை வெற்றி பெறுவேன்" என்று நம்பிக்கை தெரிவித்துள்ளார்.

### யுவராஜ் சிங்

2007 இல் ஒரு ஓவரின் ஆறு பந்துகளில் ஆறு சிக்ஸர் அடித்து உலகையே தன் பக்கம் திருப்பியவர். 2011 உலகக் கோப்பையின் 'தொடர் நாயகன் விருது வாங்கியவருக்கு 2012 இல் புற்றுநோய் கண்டறியப்பட்டு மீண்டார். இவரது கிரிக்கெட் வாழ்க்கை முடிந்துவிட்டது எனக் கருதிய பலருக்கு சேப்பாக்கத்தில் சிக்ஸருடன் 'ரீஎன்ட்ரி' கொடுத்தார். பின்னாளில் ஃபார்ம் அவுட் ஆகி 2015 இந்திய அணியில் இடம்பெறாதவர், ரஞ்சியில் கலக்கி ஆஸி. தொடருக்கான இந்திய அணியில் இடம்பிடித்ததெல்லாம் வரலாறு.



### தியாகோ சில்வா

பிரேசில் கால்பந்து அணியின் மையத்தில் புயலாகச் சுழன்று ஆடும் ஆட்டக்காரர். கால்பந்து ஆட்டத்தின் சிறந்த பாதுகாவலர் (defender) எனக் கருதப்படுகிறார். 20 வயதில் உள்ளூர் அணிக்காக விளையாடி பிரேசில் அணியில் இடம்பிடித்த போது காசநோய் மோசமான நிலையில் இருப்பது கண்டறியப்பட்டது. மருத்துவர்கள் உதவியுடன் மீண்டார். ஓய்வெடுக்க வற்புறுத்தியதற்கு செவி சாய்க்காமல் மறுபடியும் விளையாடத் தொடங்கி பிரேசில் அணியின் கப்டனாகவும் உயர்ந்தார்.



# சந்தோஷம் இரட்டிப்பாகும்

துறவி ஒருவர் பல ஊர்களுக்கும் யாத்திரை மேற்கொண்டிருந்தார். வழியில்' ஒரு கிராமம். மக்கள் எல்லோரும் துறவியை வரவேற்று வணங்கினர். ஒருநாள் துறவி அங்கே தங்கினார். கிராமத்தின் பிரபலம் துறவியைப் பார்க்க வந்தார். அவருக்கு வழிபாடுகள், கடவுள் நம்பிக்கை இவற்றிலெல்லாம் நம்பிக்கை கிடையாது.

ஒரு சம்பிரதாயத்துக்காகத் துறவியைச் சந்திக்கச் சென்றவர் துறவியிடம் கேட்டார்: "சாமி! நீங்கள் கடவுளுக்காக உங்கள் வாழ்க்கையையே துறந்துவிட்டதாகக் கேள்விப்பட்டேனே... அப்படியா?" எனக் கேட்டார்.

உடனே ஒரு புன்னகையை உதிர்த்த துறவி, "நான் ஒரு சாதாரணத் துறவி. என்னை விடவும் நீங்கள் தான் பெரிய துறவி" என்றார். பிரபலத்துக்குத் திகைப்பு. "என்ன சொல்கிறீர்கள்?" என்று கேட்டார். துறவி அமைதியாகப் பதில் சொன்னார். "ஐயா! நான் கடவுளுக்காக என் வாழ்க்கையைத் துறந் தேன். ஆனால் நீங்களோ, சுகபோக வாழ்வுக்காகக் கடவுளையே துறந்து விட்டீர்களே. ஆகவே, என்னைவிட நீங்கள்தான் பெரிய துறவி!"

இதைக் கேட்டதும் பிரபலம் வெட்கித் தலைகுனிந்தார். நம்மில் பலரும் இப்படித்தான்... குறிக்கோள், வெற்றி என்று ஓடிக் கொண்டே இருக்கிறோம். அதன் பொருட்டு கடவுளை மட்டுமல்ல கடவுள்தன்மை கொண்ட பல நற்பண்புகளையும் துறந்து விடுகிறோம். வாழ்க்கையில் வெற்றி, முன்னேற்றம், பணம், வசதி, பதவி, அதிகாரம் என எல்லாம் அவசியம்தான். ஆனால், இவை அனைத்தையும் விட முக்கியமானவை மன நிம்மதியும் உடல் ஆரோக்கியமும். ஆனால், நாம் என்ன செய்கிறோம் வெற்றிக்கான ஓட்டத்தில் நிம்மதியையும் ஆரோக்கியத்தையும் தொலைத்து விடுகிறோம்:

இருபதாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் உலகையே கவனிக்க வைத்த பெரும் செல்வந்தர் அவர். அமெரிக்காவைச் சேர்ந்தவர். எப்போதும் தொழில் குறித்த சிந்தனைதான் அவருக்கு.

ஒருமுறை பல்லாயிரம் டொலர் மதிப்புள்ள தானியங்களைக் கப்பலில் ஏற்றி அனுப்பினார். ஆனால், வெறும் 150 டொலர் கொடுத்து அதை இன்ஷூரன்ஸ் செய்ய மறுத்துவிட்டார். அன்று இரவு பெரும்புயல்! 'பொருட்கள் என்ன ஆகுமோ?' என்ற பயத்தில் இரவு முழுவதும் தூங்காமல் த்வித்த செல்வந்தர், அதிகாலையில் இன்ஷூரன்ஸ் செய்யுமாறு உதவியாளரை அனுப்பி வைத்தார். ஆனால், இன்ஷூரன்ஸ் தாள்கள் வருமுன்பே, அவரது சரக்குகள் பத்திரமாகப் போய்ச் சேர்ந்து விட்டதாகச் செய்தி வந்தது.

'அடடா... அவசரப்பட்டு 150 டொலரை வீணடித்து விட்டோமே!' என்று கவலைப்பட்டாராம் அந்தச் செல்வந்தர். விளைவு... மன அழுத்தம், கவலை, பயம் யாவும் ஒன்று சேர்ந்தன. அவரின் உடல் நிலையைக் கடுமையாகப் பாதித்தன. தீர்வு சொல்ல ஆள் இல்லை. இந்த நிலையில் தான் தமக்குத் தெரிந்தவர் வீட்டில் துறவி ஒருவர் தங்கியிருப்பதாக அறிந்தார். அவரைப் பார்க்கச் சென்றார். அந்த நேரத்திலும் அலட்சியம், செல்வச் செழிப்பு தந்த அகங்காரம் எதுவும் அவரிடம் குறைந்தபாடில்லை.

துறவியோ "போனதெல்லாம் போகட்டும்... உங்கள் கவலைகளையும் பயத்தையும் விட்டுத் தொலையுங்கள். உங்களுக்குக் கடவுள் அளித்துள்ள பெரும் செல்வத்தை மற்றவர்களுக்கு அளிக்கப் பழகுங்கள்... எல்லாம் சரியாகும்" என்று அறிவுறுத்தினார்.

அப்போதும் செல்வந்தரின் அகங்காரம் குறையவில்லை. 'எனக்குப் புத்திமதி சொல்ல இவர் யார்?' என்றே அவருள் எண்ணம் எழுந்தது. எதுவும் பேசாமல் திரும்பிவிட்டார். சில நாட்களில் மீண்டும் வந்தார்.

பொதுநலத் தொண்டுக்காகப் பெருந்தொகை வழங்கியது குறித்து சான்றுக் காகிதத்தைத் துறவியிடம் காட்டினார். மட்டுமன்றி 'என்ன, திருப்தி தானே... இப்போது எனக்கு நீங்கள் நன்றி சொல்லலாம்" என்றார்.

உடனே துறவி, 'நீங்கள்தான் எனக்கு நன்றி சொல்லவேண்டும்" என்றார் அமைதியாக. ஆனால், 'துறவி ஏன் அவ்வாறு கூறினார்?' என்பது அந்தப் பெரிய மனிதருக்குப் புரியவில்லை. எனினும் துறவியின் வார்த்தைகள், அவரைச் சிந்திக்க வைத்தன. அன்றிலிருந்து மாறினார் அவர். தனது திரண்ட செல்வத்தை வறியவர்களுக்கும் இல்லாதவர்களுக்கும் வாரி வாரி வழங்கத் தொடங்கினார்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஓட்டங்கள்

நினைவோட்டங்கள்
அன்று...
கல்விக்கூடங்கள் நோக்கி
வாழ்வின் ஓட்டங்கள்
கணனியாலும்
கணிக்கப்படவில்லை
உரிமைத் தேடலில்
பிறந்த மண் விட்டு
பிரிந்த ஓட்டங்கள்
வறுமைத் துரத்தலில்
வாழ்வாதார ஓட்டங்கள்
முகவரி உள்ளோரின்
தொலைந்த முகவரி தேடி
அலையும் ஓட்டங்கள்
இன்று
துடுப்பாட்ட ஓட்டங்கள்
எண்ணிக்கையில்
உவ்கை உள்ளங்கள்...?

தமிழினியன்.



# பல நூறு பிரதிகள்



அமைச்சர்கள், பிரதி, உதவி வேறு!
ஆலோசகர்கள்-அதிகாரிகள் ஆனால்
திட்டங்கள் - தீர்மானங்கள்
செயற்பாடுகள் இல்லை

திட்டங்கள் செயற்பாடுகள் எல்லாம்
சிற்றினத்தை அடக்கி, ஒதுக்கி
தன் இனம் வாழ வழி செய்தல்
அடக்கி வைக்க பயங்கரவாதத் தடைச் சட்டம்
ஒதுக்கி விட -தொல்பொருள் என நிலப் பறிப்பு
காணிகள் அபகரிப்பு -குடியேற்றங்கள்
பரந்து வரும் விகாரைகள்
படைகளிற்கென்றே நிலப்பரப்பு- இவை
விரைந்து ஒழுங்காக நடக்கின்றது

உலக நாடுகள் உற்றுநோக்குகின்றது
வாங்கும் பணம் அபிவிருத்தி எனில்
நாடும் முன்னேறும்!பதுக்கல் என்றால்...?
கடன் தீர்வும் ஆள் இல்லை-
இப்போ! பிழைக்க -உயிர் காக்க ஓடி
வருந்தி உழைக்கும் பிள்ளைகளின்
பணத்திற்கும் வைக்கிறார் ஆப்பு
இரண்டு தாய்மார் பட்டினியால் இறந்தனர்
நாளை இன்னும் எத்தனையோ! ஆண்டவரே!

ம. திருவரதராசா, வவுனியா.

# பிரிவின் ஈரம்



உறக்கம் தொலைத்த
இரவுகளை
ஒவ்வொன்றாய்
எழுதி மடித்து வைத்துக் கொள்கின்றேன்...

நீ தூவிய
விதைகளில் இருந்து
என் நிலத்தில்
முளைத்துச் சிரிக்கிறது காதல் செடி...

உன் கூரை தாண்டிய
மேகம்
என் முற்றத்தில்
பொழிகிறது
உன் சுவாசத்தின் ஈரங்களை...


என் சாளரத்தில் நுழைந்த
காற்று உன் வாசனை
சுமந்து வந்து
உச்சிமுகர்கிறது...

என்னில் பூத்துக் குலுங்கும்
உன்னை...
என் காதலை...
ஒரு பூங்கொத்தாய் மாற்றி
தென்றலின் கைகளில் சேர்க்கின்றேன்...

பூக்களின் இதழ்களில்
கசியத் தொடங்குகின்றது
பிரிவின் துயரம்....

சங்கரி சிவகணேசன்.

## மௌனத்தின் தேடல்- 673



# நீரைத் தேடி...

ஐம்பெரும் பூதங்களின்
ஐக்கியத்தால் உருவானது
இவ்வுலகு மட்டுமன்று
இது உயிரினங்களுக்கும் பொருந்தும்
இதில் நீர்ப்பரப்பில் நிரம்பல்
மிகவும் அதிக மென்றாலும்
உயிர் வாழ்தலை உறுதிப்படுத்தும்
சுத்தமான நீரிற்கு பெருந்தட்டுப்பாடு
நீடிக்கும் குடிநீர்த் திட்டங்கள்
நிறைவேறும் வரையிலாவது
இயற்கை தரும் மழைநீரை
இயன்றவரை பயன்படுத்துவோம்

க.நாகராசா. நுணாவில்.

# தாகம்

வானளாவ வளர்ந்த சோலைகளை அழித்து
பாலைவனமாக்கி வானளாவ உயர்ந்த மாடிக் கட்டடங்கள்
வந்ததன் விளைவு தானோ அருளானின் தகிப்பிலும்
தாகத்திற்கு தண்ணீர் பருக இயலாத அவல நிலை

சி.மகாலட்சுமி.
கொக்குவில்.

# நீரும் பணமானது

குடிதண்ணீர்ப் பஞ்சம்
வரும் என்ற செய்தி
செவிக்கு எட்டிய போதே
உசாரான பண முதலைகள்
நீரைப் போத்தலில் அடைத்து
விளம்பரம் செய்து விற்கின்றன
வசதி உள்ளோர் வாங்கி அருந்த
பணமற்றோர் மட்டுப்படுத்திய
குழாய்நீருக்காய் காத்திருக்கின்றன

சி.இ.அன்புதுரை,
சம்மட்டியோலை,
மானிப்பாய்.

## மௌனத்தின் தேடல்- 674



அன்பு வாசகர்களே உங்கள் மனதில் தோன்றும் கவிதை, வியாசர் பதில்களை
ஆசிரியர் மௌனத்தின் தேடல்
வலம்புரி- சாங்குநாதம்
இல.03,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
எனும் முகவரிக்கு அனுப்பி வையுங்கள்

# தாகத்தின் தவிப்பு

தாகத்தின் வலிதனை உணர்ந்திடுவாய்
தண்ணீர்ப் பந்தல் அமைத்து நீர் தன்னை வார்த்திடுவாய்
குழாய்நீரும் கூடத் துளித்துளியாய் வருகின்றதே
குழந்தையின் தாகத்தைத் தீர்க்க மறுக்கிறதே
குவலையத்தின் முக்கால் பங்குநீர் இருந்தும்
குடிநீராய்ப் பயன்படுவது ஒருவித நீர் மட்டும்
நீரின்றி உலகம் அமையாது என்பதனை
நீயும் உணர்ந்திடுவாய்
இயற்கை வளத்தைப் பாதுகாத்து இம்மாநிலத்தில்
இன்பமாய் நீயும் வாழ்ந்திடுவாய்

ஆ.செல்வி.
திருநாவலூர்.

# தண்ணீர்த் தாகம்

காடு வெட்டி நகரம் கட்ட
பூமிப் பந்து நெருப்புக் குழம்பாய்
நிலத்தடிநீர் செத்துப் போச்சு
நிலைகெட்ட மானிடர் வாழ்வால்
மழைத்துளி பெய்ததனால்
விவசாயம் கெட்டதனால்
பஞ்சம் வந்து பரிதவிக்கும்
மக்கள் கூட்டம்
கொஞ்சம் கூட நீரின்றி அலைந்து
தாகம் கொண்டு மயக்கமுற்றார்
பாவம் என்று இறைவன் தான்
வழி ஒன்று செய்ய வேண்டும்

கும்பவழியான். உடுப்பிட்டி.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org




காலத்தின் பதிவு 66

# கடல்புறா

## நான் யார்?

நான் இதே அறையில் தான் அன்றும் உட்கார்ந்திருந்தேன். வெளிக்கதவு தடதட வென்று இடிபட்டது. என்ன காரணத்தாலோ காவலரை ஏவாமல் அன்று நானே சென்று வெளிப் பெருங் கதவைத் திறந்தேன்.

சொட்டச் சொட்ட மழையில் நனைந்த வீரனொருவன் கையில் சுற்றிய ஒரு துணியுடன் நின்றிருந்தான். என்னை இடித்துத் தள்ளிக்கொண்டு உள்ளே நுழைந்த அவன் என்னையும் கூட வரும்படி சைகை செய்தான்.

நான் அவனை அழைத்துக் கொண்டு இந்த அறைக்கு வந்தேன். இதோ நீ படுத்திருக்கும் அதே மஞ்சத்தில் அவன் துணிச் சுருளை வைத்துப் பிரித்தான். அதற்குள் நீ இருந்தாய். அப்பொழுது உனக்கு ஒரு வயது. உன் மலர்க் கண்கள் மூடிக் கிடந்தன. உன் கனி இதழ்கள் மிகவும் சிவந்திருந்தன.

அப்பொழுதும் இதே மஞ்சள் நிற நீ...என்று சற்று அவள் சரிதையை நிறுத்திய பலவர்மன். "இன்றும் இங்கு படுத்திருக்கிறாய் அதே மஞ்சம் அதே பெண் ஆனால் எத்தனை வேறுபாடு?" என்று கூறினான். மஞ்சளழகியின் சித்தம் பல திசைகளில் சுழன்றது. "வந்தவன் யார்?" என்று மெள்ளக் கேட்டாள். "அவன் ஒரு வீரன்."

"என்னை மட்டும் இங்கு விட்டுப் போய் விட்டானா?" "இல்லை. உன்னுடன் ஓர் ஓலையையும் விட்டுப் போனான்." "அந்த ஓலையில்?" மஞ்சளழகி கேள்வியுடன் கண்களை உயரத் தூக்கினாள். "நீ யார் என்பது இருந்தது." என்றான் பலவர்மன்.

"நான் யார்?" என்று கேட்டாள் மஞ்சளழகி. "சொல்ல எனக்கு உரிமையில்லை. துணிவும் இல்லை." திட்டமாக வந்தது பலவர்மனின் பதில்.

### கரும்பும் கூலியும்

தந்தை சொன்ன சொற்களால் சிந்தை நெகிழ்ந்து பஞ்சணையில் கிடந்த மஞ்சளழகியின் மலர்விழிகளில் கனவுச் சாயை பல விநாடிகளுக்குப் படர்ந்து நின்றது. பெற்ற தந்தையென்று அன்று வரை தான் நினைத்திருந்தவர் திடீரென வளர்ப்புத் தந்தையாக மாறிவிட்டதை எண்ண, எண்ண அவள் மனதில் விபரிக்க இயலாத குழப்பமும் வருத்தமும் இன்பமும் கலந்து தாண்டவமாடின.

இளைய பல்லவன் தன் வாழ்வில் அன்று காலையில்தான் காலடி எடுத்து வைத்தான். ஆனாலும் அந்த ஒரேநாளில் ஏற்பட்டு விட்ட பல சிக்கல்களை நினைத்தால் குழப்பமும் தனது பிறவியே பெரும் கதையாகி உண்மைத் தாய், தந்தையர் யாரென்பதை அறிய முடியாத காரணத்தால் வருத்தமும் இடையிடையே இளையபல்லவனின் வீரமும் சிந்தையில் வளைய வந்ததால் இன்பமும் ஒன்றுக்கொன்று பின்னிப் பின்னி ஏதேதோ கனவு அலைகள் அவள் மனத்தில் பாய்ச்சிக் கொண்டிருந்தன. அந்தக் கனவின் விளைவாகப் பஞ்சணையில் தன் பக்கத்தில் உட்கார்ந்து கொண்ட பலவர்மனைக் கூட அவள் நீண்ட நேரம் ஏறெடுத்துப் பார்க்கவில்லை.

அக்ஷயமுனைக் கோட்டைத் தலைவன் சொன்னதன் பிறவிப் பெரும் கதைக் காட்சியைத் திரும்பத் திரும்ப நினைத்துப் பார்த்தாள். பத்தொன்பது வருடங்களுக்கு முன்பு பெய்த அந்தப் பெரு மழை அவள் சிந்தையில் அப்பொழுதும் பெய்தது. அந்தப் பெரும் காற்று அந்த விநாடியிலும் அவள் இதயத்தின் மீது விர்விர்ரென்று அடித்தது.

தன்னைத் துணியில் சுற்றித் தூக்கி வந்த வீரனையும் அவள் மனக் கண் பார்த்தது. அவன் வெளிப் பெருங் கதவைத் தடதட வெனத் தட்டின தட்டல் அவள் இதயத்தை பலமாகத் தட்டியது. எங்கிருந்து வந்து,எதற்காக இங்கு வளர்ந்தேன்? நான் யார், நான் யார், என்ற கேள்விகள் திரும்பத் திரும்ப அவள் புத்தியில் எழுந்ததால் வேதனை விளைந்ததேயொழிய விடை எதுவும் கிடைக்கவில்லை அவளுக்கு. (தொடரும்)

# நான் வைரமுத்து பேசுகிறேன்... 12

## புதுக்கவிதையும் பாடுபொருளும்

மனசின் அடியில் ஒரு மங்கிய சித்திரம்

ட்யூப் விளக்குகளின் மீது பூச்சிகள் மொய்த்துக் கொண்டிருந்தன.

ஒலி பெருக்கியின் முன்னால் அந்த ஆஜானுபாகுவான உருவம் ஆடாமல் அசையாமல் நின்று அரசியல் பேசியது.

நான் முண்டியடித்துக் கொண்டு மேடையின் முன் பக்கமாய் முன்னேறி அவருக்கும் எனக்கும் ஓர் ஆறடி இடைவெளியில் அவரது உதட்டசைவுகளையே இமைக்காமல் பார்த்துக் கொண்டிருந்தேன்.



அவர் கண்கள் சிவந்திருந்ததன் காரணத்தை அப்போதெல்லாம் நான் அறியேன். என் மனசுக்குள் முடிந்து வைத்திருந்த அந்த மனிதனைப் பக்கத்தில் போய் பார்த்து விட்ட பரவசம் பல நாள் என் உடம்பெங்கும் பரவியிருந்து.

நாட்கள் நகர்கின்றன.

மாதங்கள் வருஷங்களுக்குள் போய்ப் புதைகின்றன.

ஓ!... கால விருட்சத்தில் சில இலையுதிர் காலங்கள்!

பச்சையப்பன் கல்லூரிக்குப் படிக்க வருகிறேன்.

எனக்குள் நானே மலர்ந்து என்னை ஒரு மனிதன் என்று கண்டு கொள்ளும் முன் ஒரு கவிஞன் என்று கண்டு கொள்கிறேன்.

என் கவிதைகள் வித்தியாசமான வித்துகளிலிருந்து விளைந்திருப்பதாய் எனது புத்தி எனக்குப் போதிக்கிறது.

அவற்றை நான் ஆசையாய் நேசிக்கும் காதல் கவிஞனிடம் காட்டிக் கையொப்பம் பெற வேண்டும் என்று தவித்தும் மனசு தந்தியடிக்கிறது.

அப்போதுதான் அவரைச் சந்திக்க நான் துடிக்கின்றேன்.

என் அத்தனை கவிதைகளையும் அள்ளிக்கொண்டு ஓர் அதிகாலையில் மரங்கள் பச்சைக்குடை பிடித்திருக்கும் அந்தப் பூங்காப் பிரதேசத்திற்குப் போகிறேன்.

ஆறு மணிக்குச் சென்ற நான் எட்டு மணி வரைக்கும் காத்திருந்தேன்.

நான் ஒரு மனிதனுக்காக முதன் முறையும் கடைசி முறையும் அதிக நேரம் காத்திருந்தது அன்றுதான்.

எட்டு மணிக்கு அந்தச் சூரியன் வீட்டுக்குள்ளிருந்து வெளியே வந்தது.

அற்புதமான தோற்றம் அவருக்கு.

தங்கம், மஞ்சள் குளித்து வந்தது மாதிரி நிறம்.

நெற்றியில் பொட்டு என்ற பெயரில் ஒரு சின்ன சிவப்பு நிலா.

சூரிய வெளிச்சம் பட்டுத் திரவப்பரப்பு பளபளப்பது மாதிரி வெளிச்சம் மிதக்கும் விழிகள்.

சந்தனச் சட்டை, வெடித்த பருத்தி போல் வேட்டி.

எல்லோருக்கும் ஓரிரு வார்த்தையில் பதில் சொல்லி முற்றுப்புள்ளி வைத்து முடித்த பிறகு என் மீது ஒரு வினாப் பார்வையை வீசினார்.

அன்று நான் கருதி வந்த கனவு ஏதும் கைகூடவில்லை.

இதுதான் நான் அவரைச் சந்திக்கப் போன சம்பவம்.

காலம் மேலும் தோலுரித்தது.

கவியரங்கங்களில் கலந்து கொள்ளுமாறு அவரே கடிதம் கொடுத்தனுப்பினார்.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'நித்திலம் தொகுத்து வழங்கும்'

சுகமான விடியல்

354

வலம்புரியின் மருத்துவச்சுடர்

# கால்புண்கள் ஏற்பட்டால் நீரிழிவு நோயாளர்கள் என்ன செய்ய வேண்டும்?

நீரிழிவு நோயாளர்களுக்கு காலிலும் பாதங்களிலும் ஏற்படும் காயங்கள், இலகுவில் கிருமித் தொற்றுக்கு உள்ளாகுகின்றன. சிலருக்கு இது மாறாப் புண்களை ஏற்படுத்துகின்றன. இன்னும் சிலருக்குசத்திர சிகிச்சை மூலம் அவயவ இழப்பு செய்யப்பட வேண்டிய பாரதூரமான நிலையையும் மற்றும் சிலருக்கு உயிரிழப்பு ஏற்படக்கூடிய பரிதாப நிலையையும் ஏற்படுத்துகின்றன.



**நீரிழிவு நோயாளர்களுக்கு ஏன் காலில் புண்கள் ஏற்படுகின்றன?**

1. நீரிழிவு பாதிப்பினால் தசைகளில் ஏற்படும் வலிமை இழப்புக் காரணமாக, பாதங்களில் சாதாரணமாகக் காணப்படும் வளைவுத் தன்மைகள் சீரற்றுப் போகின்றன. இதனால் உடற்பாரமானது பாதங்களில் ஒழுங்கின்றிப் பரவி விழுகின்றது. இதுபாதத் தோல்களில் சிறிய காயங்களும் தோல் தடிப்பு (ஆணிக்கூடு) போன்றவையும் ஏற்பட வழிவகுக்கின்றது.

2. நரம்பு மண்டலத்தில் ஏற்படும் நீரிழிவு பாதிப்பு காரணமாக காலில் உள்ள தொடுகை உணர்ச்சி குறைவடைவதால் காலில் ஏற்படும் காயங்கள், நோ, வலி என்பவை, இலகுவாக உணரப்படுவது இல்லை. இந்த நிலை மேலதிக கிருமித் தாக்கம் ஏற்படுவதற்கு ஏதுவாக அமைகின்றது.

3. நீரிழிவு நோயின் பாதிப்பின் ஒரு கட்டமாக காலுக்கும் பாதத்துக்கும் இரத்த ஓட்டம் குறைவடைகிறது. இதனால் கால், பாதங்களில் உள்ள தோல் மற்றும் இழையங்களுக்கு போசனையும் நல் இரத்தமும் குறைவாகவே கிடைக்கிறது. இதனால் கிருமித் தாக்கத்தைக் கட்டுப்படுத்த முடியாத நிலை ஏற்படுகிறது.

**எவ்வாறான நீரிழிவு நோயாளர்களுக்கு இவ்வாறான கால் புண்கள் வரச் சாத்தியங்கள் அதிகம்?**

1. காலில் பாதத்தில் உணர்வுத்திறன் குறைவடைந்தவர்கள்.

2. காலில் குருதிச் சுற்றோட்டம் குறைவாக உள்ளவர்கள்.

3. பாதங்களின் விரல்களின் வடிவ மாற்றம் ஏற்பட்டவர்கள்.

4. சிறுநீரக, கண் பாதிப்பு ஏற்பட்ட நீரிழிவு நோயாளர்கள்.


5. ஒரு முறை காலில் புண் வந்து மாறியவர்கள்.

6. கால் மற்றும் பராமரிப்புக் குறைபாடு உள்ள நீரிழிவு நோயாளர்கள்.

**காலில், பாதங்களில் ஏற்படும் புண்களைத் தவிர்க்க நீரிழிவு நோயாளிகள் செய்யக் கூடியவை**

1. கால்களையும் பாதங்களையும் தினசரி அவதானித்து பராமரிக்க வேண்டும்.

2. ஏதாவது சிறு காயங்கள் மற்றும் மாற்றங்கள் பாதங்களில் ஏற்படின் உடனடியாக வைத்திய ஆலோசனை பெறுதல் வேண்டும்.



3. குருதியில் குளுக்கோஸின் அளவைக் கட்டுப்பாட்டில் வைத்திருக்க வேண்டும்.

4. குருதி அழுத்தம், கொலஸ்ரோல் அதிகமாதல் போன்றவற்றுக்கு மருத்துவ ஆலோசனையுடன் மருந்துகளைக் கையாள வேண்டும்.

5. புகைப் பிடிக்கும் பழக்கத்தைக் கைவிட வேண்டும்.

**கால்புண்கள் ஏற்பட்டால் நீரிழிவு நோயாளர்கள் என்ன செய்ய வேண்டும்?**

1. கைவைத்தியம் மற்றும் சுயவைத்தியம் செய்தல் போன்றவற்றைத் தவிர்க்க வேண்டும்.

2. சிறிய காயம் எனினும், தகுதியான மருத்துவரிடம் சிகிச்சை பெற வேண்டும்.

3. காயங்களுக்கும் புண்களுக்கும் உரிய மருந்திட்டு பாதுகாப்பாகப் பராமரிக்க வேண்டும். கிருமித் தொற்றுக்கான மருந்துகளை வைத்திய ஆலோசனைப்படி கிரமமாக எடுக்க வேண்டும்.

**பேராசிரியர், சி.இராஜேந்திரா.**
**சத்திர சிகிச்சை நிபுணர்**

# கோனில் கை வைக்க முன்பு எமது மனதில் கை வைத்துப் பார்ப்போம்

தெருக்களிலே எமது வாகனங்களில் இருந்து எழுப்பப்படும் கோன் ஒலிகளில் 95 சதவீதமானவை அநாவசியமாக எழுப்பப்படுகின்றன.

நல்ல முறையில் வாகனத்தைக் கட்டுப்படுத்தும் திறனும், மன அமைதியும் சுயநலமற்ற மனப்பாங்கும் இருந்தால் நாம் தேவையற்ற கோன்களை தவிர்த்துக் கொள்ளலாம்.

எமது கோபத்தையும் மனப் பதற்றத்தையும் அவசரத்தன்மையையும் வெளிக்காட்ட சில சமயம் கோன் அடித்த படியே செல்கின்றோம்.

ஒவ்வொரு தடவையும்கோனில் கை வைக்க முன்பு எமது மனதில் கை வைத்துப் பார்ப்போம். நிச்சயமாக எம்மால் அநாவசிய கோன்களைத் தவிர்த்துக் கொள்ள முடியும். இவ்வாறான சத்தங்களினால் எமது சுற்றாடலில் அமைதித்தன்மை குலையும் பொழுது இது மனிதர்களில் பல்வேறுபட்ட தாக்கங்களை ஏற்படுத்துகின்றன.

இத்தாக்கங்களினால் ஏற்படும் விளைவுகளில் முக்கியமானவையாக மனஅழுத்தம், மனச்சோர்வு, ஞாபக மறதி, நித்திரைக் குழப்பம், உயர் குருதி அமுக்கம், இருதய நோய்கள், மாரடைப்பு, கேட்கும் திறன் குறைவடைதல், கல்வி கற்றல் திறன் குறைவடைதல், இலகுவில் நோய் வாய்ப்படுதல் என்பவற்றைக் குறிப்பிடலாம்.

**Dr.சி.சிவன்சுதன்**
**பொது வைத்திய நிபுணர்**

**பலருக்கு பயன்படக்கூடிய ஆரோக்கியம் சம்பந்தமான அல்லது உளவியல் சமூக மேம்பாடு சம்பந்தமான உங்கள் சந்தேகங்களை (thamilhealth@gmail.com) என்ற மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பி வைக்கவும். அதற்கான எமது பதில்கள் இங்கு பிரசுரிக்கப்படும்**

noolaham.org | aavanaham.org

# 2024 இல் வழமைக்கு திரும்பும் நிர்மாணத்துறை நடவடிக்கை

(கொழும்பு)

உள்ளூர் நிர்மாணத்துறை 2024 ஆம் ஆண்டளவில் வழமைக்கு திரும்பும் என நம்பிக்கை வெளியிடப்பட்டுள்ளது.

இலங்கையின் பொருளாதார நடவடிக்கைகளுக்கு மீண்டும் சிறப்பான வலுவினை வழங்கும் பங்களிப்பாளராக பலன் தரும் தன்மையுடன் இயங்கும் என இலங்கை நிர்மாணத்துறை அமைப்பின் தலைவர் ரொஹான் கருணாரட்ன தெரிவித்துள்ளார்.

நிர்மாண நடவடிக்கைகளை மீண்டும் பழைய நிலைமைக்கு கொண்டு வருவதற்காக சிறப்பாக செயற்பட்ட ஜனாதிபதிக்கும் அரசாங்கத்திற்கும் அவர் தமது நன்றியையும் வெளிப்படுத்தியுள்ளார். (4)

## பதில் நிதி அமைச்சராக ஷெகான் சேமசிங்க

(கொழும்பு)

பதில் நிதி அமைச்சராக இராஜாங்க அமைச்சர் ஷெஹான் சேமசிங்க நியமிக்கப்பட்டுள்ளார். இதேவேளை, பதில் பாதுகாப்பு அமைச்சராக இராஜாங்க அமைச்சர் பிரேமித பண்டார தென்னகோன் நியமிக்கப்பட்டுள்ளார்.

உத்தியோகபூர்வ விஜயம் ஒன்றை மேற்கொண்டு ஜனாதிபதிரணில் விக்கிரமசிங்க பிரான்ஸ் மற்றும் இங்கிலாந்து நோக்கி புறப்பட்டுள்ள நிலையில் இந்த நியமனங்கள் இடம்பெற்றுள்ளன. (4)


### மணமகன் தேவை

1995. இந்து. உத்தராடம். Teacher. யாழ்ப்பாணம். மணமகள் பதிவு இல: 8963.தரகர் கூலி இல்லை.பதிவுக் கட்டணம் மட்டுமே. WWW.EQMarriage Service.com அழையுங்கள். 076 664 9401. Ensured Quality Lanka Pvt Ltd, Colombo 04. (சி-2035)

### விற்பனைக்குண்டு

இராசபாதை வீதியில் காணி விற்பனைக்குண்டு.

தொடர்புகளுக்கு

077 773 0567 (16002)


### மணமகள் தேவை

1979. இந்து.சதயம். Teacher. பருத்தித்துறை. மணமகன் பதிவு இல: 9263. தரகர் கூலி இல்லை. பதிவுக் கட்டணம் மட்டுமே. WWW.EQMarriage Service.com அழையுங்கள். 076 664 9401. Ensured Quuality Lanka Pvt Ltd, Colombo 04. (சி-2035)

### மணமகள் தேவை

1988. இந்து.அஷ்வினி.Engineer. காரைநகர். மணமகன் பதிவு இல: 9099. தரகர் கூலி இல்லை. பதிவுக் கட்டணம் மட்டுமே. WWW.EQMarriage Service.com. அழையுங்கள் 076 664 9401. Ensured Quality Lanka Pvt Ltd, Colombo 04. (சி-2035)

### பாணலிங்கேஸ்வரம் அருள்மிகு நர்மதா நதீஸ்வரர் சிவன்கோயில் கூறுவிலை கோரல் இராஜகோபுரம்


இராஜகோபுரம்

கலசம் உட்பட 59' உயரம் கொண்ட இராஜகோபுரம் அமைப்பதற்கு சிற்பக் கலைஞர்களிடமிருந்து கூறுவிலை மனுக் கோரப்படுகின்றது.

100' நீளம் - 40' அகலம் உடைய மண்டபம் தட்டை பிளேட் அடித்தல் 100' நீளம் கபோதக வளைவு அடித்தல் தட்டைப்பிளேட்மேல்பூச்சு, கீழ்ப்பூச்சு ஆகிய வேலைகளுக்கும் கூறு விலை கோரப்படுகிறது.

உங்கள் எழுத்து மூலமான கூறு விலை கேள்விகளை ஆலய முகவரிக்கு அனுப்பி வைக்கவும். 28.06.2023 இற்கு முன்னதாக 076 409 6121 என்ற தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பை ஏற்படுத்தி மேலதிக விபரங்களைத் தெரிந்து கொள்ளலாம். (16000)

நர்மதா நதீஸ்வரர் சிவன் கோயில்,
மாந்தை கிழக்கு விநாயகபுரம்,
ஒட்டங்குளம்,
துணுக்காய்.



### மகாதேவ ஆச்சிரமம்

Regd No:-HA/04/kl02 Of 25/11/1980

T.P :-021 324 3443, 077 459 4283, 077 431 9281

#### ஸ்ரீமத் வடிவேல் சுவாமிகள் 33 ஆவது குருபூசை

காலம் :- 22.06.2023 வியாழக்கிழமை
நேரம் :- காலை 10 மணி
இடம் :- ஆச்சிரம பிரார்த்தனை மண்டபம்

அங்கத்தவர்கள், சிவனடியார்கள் யாபேரும் பங்குபற்றி குருவருளை பெற்றுக்கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

அன்பே சிவம்

ஜெயந்திநகர், கிளிநொச்சி, இலங்கை.

குருநாதன் பணியில் அறங்காவலர், நிர்வாக உறுப்பினர்கள். (15982)

### யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை
### உயர் பட்டப்படிப்புகள் பீடம்
#### புதிய அனுமதிகள்

1. தமிழில் முதுமாணி 2023/24 (அணி IX)
2. கிறிஸ்தவக் கற்கைகளில் முதுமாணி 2023/24 (அணி II)
3. சுகாதார முகாமைத்துவத்தில் முதுவிஞ்ஞானமாணி 2023/25 (Batch III)

மேற்படி சுயநிதிக் கற்கைநெறிக்கான விண்ணப்பங்கள் தகுதியானவர்களிடமிருந்து கோரப்படுகின்றன. விண்ணப்பப்படிவம் மற்றும் மேலதிக விபரங்களை உயர்பட்டப்படிப்புகள் பீடத்தின் வலைத்தளத்தில் (www.grad.jfn.ac.lk) பார்வையிடலாம்.

விண்ணப்ப முடிவுத்திகதி - 31.07.2023
மேலதிக தொடர்புகளுக்கு - 021 222 3608 பதிவாளர் (C-6758)


### கல்யாணமாலை
#### சர்வதேச திருமண சேவை

| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
|---|---|
| பிறப்பு: 1996 இந்து<br>நட்சத்திரம்: கார்த்திகை<br>உயரம்:5' 5<br>தகைமை/தொழில்:O/L கடைவேலை<br>எதிர்பார்ப்பு: வெளிநாடு<br>தொ.இ: B/13699 | பிறப்பு:. 1994 இந்து<br>நட்சத்திரம்: பூசம்<br>கி.பா: 47<br>உயரம்:4'10<br>தகைமை/தொழில்: BA (Externel)<br>எதிர்பார்ப்பு: படித்த உத்தியோகமுள்ள வரன்<br>தொ.இ:G/13768 |
| பிறப்பு: 1991 இந்து<br>நட்சத்திரம்: ஆயிலியம்<br>உயரம்:168 cm<br>தகைமை/தொழில்: BBA, MBA கணக்கு பதியுநர் (அரச)<br>எதிர்பார்ப்பு: அரச தொழில்<br>தொ.இ: B/13703 | பிறப்பு:1998 இந்து<br>நட்சத்திரம்: பூராடம்<br>கி.பா: 29 1/2<br>உயரம்:5' 7<br>தகைமை/தொழில்: BSc (Hons) Civil Engineer<br>எதிர்பார்ப்பு: உயர்பதவி. வெளிநாடு<br>தொ.இ: G/13771 |
| பிறப்பு: 1990 இந்து<br>நட்சத்திரம்: சதயம்<br>கி.பா: 29<br>உயரம்: 6<br>தகைமை/தொழில்: A/L சொந்த தொழில்<br>எதிர்பார்ப்பு: படித்த பெண்/ வெளிநாடு<br>தொ.இ: B/13705 | பிறப்பு: 1995 இந்து<br>நட்சத்திரம்: அச்சுவினி<br>கி.பா:26 1/2<br>உயரம்:5<br>தகைமை/தொழில்: BSc Computer Science<br>எதிர்பார்ப்பு: அரச உயர் பதவியுள்ள வரன்<br>தொ.இ:G/13776 |
| பிறப்பு: 1979 இந்து<br>நட்சத்திரம்: அச்சுவினி<br>கி.பா: 20<br>உயரம் : 5' 8<br>தகைமை/தொழில்:A/L (கனடா)<br>எதிர்பார்ப்பு: ஆங்கிலம் பேசக்கூடிய பெண்<br>தொ.இ: B/13709 | பிறப்பு: 1998 இந்து<br>நட்சத்திரம்: சதயம்<br>கி.பா: 69<br>உயரம்:5' 4"<br>தகைமை/தொழில்: A/L தையல்<br>எதிர்பார்ப்பு:வெளிநாடு<br>தொ.இ:G/13777 |

கல்யாணமாலை
இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 021 221 5434
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக் கட்டணம் 4000 ரூபாய் மட்டும்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அடுத்தடுத்து மோதி பேருந்துகள் விபத்து





0

தென்கொரியாவில் நேற்று முன்தினம் சியோலின் கிழக்கே உள்ள நெடுஞ்சாலையில் மூன்று பள்ளிப் பேருந்துகள் அடுத்தடுத்து மோதி விபத்துக்குள்ளானது.

இந்த விபத்து சம்பவத்தில் மாணவர்கள் உட்பட 80க்கும் மேற்பட்டோர் காயமடைந்துள்ளனர். இது குறித்து தகவல் அறிந்து சம்பவ இடத்திற்கு விரைந்த மீட்புப் படையினர் விபத்தில் சிக்கிய மாணவர்கள் மற்றும் ஆசிரியர்களை காயங்களுடன் மீட்டனர்.

அத்துடன் பலத்த காயங்களுடன் இரண்டு மாணவர்கள் உட்பட 3 பேர் மீட்கப்பட்டுள்ளனர். இவர்களுக்கு மருத்துவமனையில் சிகிச்சை அளிக்கப்பட்டு வருவதாக அந்நாட்டு ஊடகங்களில் செய்தி வெளியாகியுள்ளது. (4)

## வடகொரியாவுக்குப் பதிலடி
# தென்கொரியாவுக்கு நீர்மூழ்கிக் கப்பல்களை அனுப்பிய அமெரிக்கா



(வோஷிங்டன்)

வடகொரியா ஏவுகணை சோதனை நடத்தியதை தொடர்ந்து தென்கொரியாவுக்கு நீர்மூழ்கிக் கப்பலை அமெரிக்கா அனுப்பியுள்ளதாக செய்திகள் வெளியாகியுள்ளன.

வடகொரியா தனது கிழக்கு கடற்கரையில் ஒரு பாலிஸ்டிக் ஏவுகணையை கடலில் செலுத்தி சோதனை நடத்தியதாக தென்கொரியா தெரிவித்துள்ளது.

இதையடுத்து, அமெரிக்காவானது நேரடி எதிர்ப்புத் தெரிவிக்கும் வகையில் தென்கொரியாவுக்கு நீர்மூழ்கிக் கப்பலை அனுப்பியுள்ளது. அதிலும், வடகொரியா ஏவுகணைச் சோதனை செய்த அடுத்த நாளே, சுமார் 150 டோமாஹாக் ஏவுகணைகளை எடுத்துச் செல்லும் திறனுடைய அணுசக்தியால் இயங்கும் நீர்மூழ்கிக் கப்பலை அமெரிக்கா அனுப்பியுள்ளது.

யுஎஸ்எஸ் மிச்சிகன் எனப்படும் இந்த போர்க்கப்பல் உலகின் மிகப்பெரிய நீர்மூழ்கிக் கப்பல்களில் ஒன்று எனவும் சுமார் 2,500 கிலோமீற்றர் வரம்பைக் கொண்டு ஏவுகனை ஏவலாம் என்றும் கூறப்படுகின்றது. (4)

# ரஷ்யப் படைகளை மீளப் பெற்றால் பேச்சுவார்த்தைக்கு தயார்

## உக்ரைன் ஜனாதிபதி அறிவிப்பு

(கீவ்)

**ஆக்கிரமித்துள்ள உக்ரைன் பிராந்தியத்தில் இருந்து, ரஷ்ய துருப்புக்கள் வாபஸ் பெற்ற பின்னரே அமைதி பேச்சுவார்த்தைக்கு வாய்ப்புள்ளதாக உக்ரைன் ஜனாதிபதி ஜெலென்ஸ்கி தெரிவித்துள்ளார்.**


உக்ரைன்- ரஷ்யப் போரானது ஒன்றரை ஆண்டுகளை கடந்து நடந்து வரும் நிலையில், உக்ரைனின் ஐந்தில் ஒரு பகுதியை ரஷ்யா ஆக்கிரமித்துள்ளதாக கூறப்பட்டுள்ளது.

இதனால் உக்ரைன், அமெரிக்கா போன்ற மேற்கத்தேய நாடுகளின் உதவியுடன் பதில் தாக்குதல் நடத்தி ரஷ்யாவால் ஆக்கிரமிக்கப்பட்டுள்ள இடங்களை மீட்பதற்காக தீவிர முயற்சி எடுத்து வருகின்றது.

இவ்வாறான சூழலில், ஆபிரிக்கத் தலைவர்கள் இரு நாடுகளுக்கு இடையிலான போரை முடிவுக்கு கொண்டு வருவதற்கு பேச்சுவார்த்தை நடத்த முன்வந்துள்ளனர்.

அதன் முதலாவது கட்டமாக அவர்கள்நேற்று முன்தினம் உக்ரைன் ஜனாதிபதியை சந்தித்து அமைதி பேச்சுவார்த்தை தொடர்பாக ஆலோசனை நடத்திய போது பேச்சுவார்த்தைக்குப் பின்னர் உக்ரைன் ஜனாதிபதி. ஆக்கிரமித்துள்ள உக்ரைன் பிராந்தியத்தில் இருந்து, ரஷ்ய துருப்புக்கள் வாபஸ் பெற்ற பின்னரே அமைதி பேச்சுவார்த்தைக்கான வாய்ப்புள்ளதாக தெரிவித்துள்ளார்.





ஆக்கிரமிப்புக்காரர்கள் தமது நிலத்தில் உள்ள போது, ரஷ்யாவுடன் எந்தவொரு பேச்சுவார்த்தைக்கும் தயாராகுவது என்பது தமது நிலத்தை முடக்குவது மட்டுமன்றி அது எல்லாவற்றையும் முடக்குவதற்கு சமனானது என்றும் அது துன்பமானது என்றும் குறிப்பிட்டுள்ளார்.

மேலும் தமக்கு உண்மையான அமைதி தேவை என்றும் அதற்கு தமது நிலத்தில் இருந்து ரஷ்ய துருப்புகள் உண்மையாகவே வெளியேற வேண்டும் என்றும் ஜெலென்ஸ்கி தெரிவித்துள்ளார்.

மேலும், ஆபிரிக்க தலைவர்கள் ரஷ்ய ஜனாதிபதியை சந்திக்கவுள்ளனர் என்பதும் குறிப்பிடத்தக்கது. (4)

# டொலருக்கு மாற்றீடாக யுவானை அமுல்படுத்த சீனா வியூகம்

(பீஜிங்)

அமெரிக்க டொலர் சர்வ தேச அளவில் தற்போது ஏற்றுக் கொள்ளப்பட்ட நிலையில் தமது நாட்டின் பண அலகான யுவானை உலகமயமாக்க சீனா தற்போது முயற்சிகளை எடுத்து வருகின்றது.

இரண்டாம் உலகப் போரின் போது பலவீனமடைந்த நாடுகளுக்கு அமெரிக்கா கடனுதவி வழங்கியதன் நிமிர்த்தம் அமெரிக்காவின் பணமான டொலர் உலக அளவில் ஏற்றுக் கொள்ளப்பட்ட பண அலகாக மாற்றங் கண்டது.

தற்போது வரை அந்நியச் செலாவணி சந்தையில் மொத்த வரம்பில் 85 சதவீதத்திற்கு அதிகமான இடத்தை அமெரிக்க டொலர் பிடித்து வைத்துள்ளது.

இது இவ்வாறிருக்க இதனைத் தளர்த்த சீனாவும் ரஷ்யாவும் தொடர்ந்து முயற்சித்து வருகின்றன.

இதனடிப்படையில் தமது நாட்டு பண அலகான யுவானை சர்வதேச நாணயமாக மாற்றும் முயற்சியின் பொருட்டு 24 பெரிய நிறுவனங்கள் யுவானில் வர்த்தகம் மேற்கொள்ள இருக்கின்றது.(4)

# கிரேக்க கடற்பரப்பில் மூழ்கிய படகு 500 குடியேற்றவாசிகள் மாயம்!

## ஐ.நா. தகவல்

(வோஷிங்டன்)

கிரேக்க கடற்பரப்பில் மூழ்கிய படகிலிருந்த 500 குடியேற்றவாசிகள் காணாமல் போயுள்ளனர் என ஐக்கிய நாடுகள் மனித உரிமை அலுவலகம் தெரிவித்துள்ளது.

பெருமளவு பெண்களுக்கும் குழந்தைகளிற்கும் என்ன நடந்தது என்பது தெரியவில்லை என மனித உரிமை அலுவலக பேச்சாளர் ஜெரெமி லோரன்ஸ் தெரிவித்துள்ளார்.

பெரும்வேதனையை அதிர்சியை ஏற்படுத்தும் இந்த உயிரிழப்புகள் ஆள்கடத்தல் காரர்களை நீதியின் முன் நிறுத்த வேண்டிய அவசியத்தை வெளிப்படுத்தியுள்ளது எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

உயிரிழந்தவர்களின் குடும்பத்தவர்களிற்கான ஐ.நா மனித உரிமை ஆணையாளரின் அனுதாபச்செய்தியை அவர் வெளியிட்டுள்ளார்.

குடியேற்றவாசிகள் பயணம் செய்வதற்கான வழிகளை திறக்க வேண்டும். பொறுப்பை பகிரவேண்டும். கடலில் மீட்கப்பட்ட அனைத்து மக்களும் பாதுகாப்பாக இறங்குவதற்கான ஏற்பாடுகளை செய்ய வேண்டும் என மனித உரிமை ஆணையாளரின் பேச்சாளர் வேண்டுகோள் விடுத்துள்ளார்.



கிரேக்கத்தின் தென்பகுதியில் குடியேற்றவாசிகளுடன் மூழ்கிய படகில் 100 சிறுவர்கள் பயணித்தனர் என தகவல்கள் வெளியாகியுள்ளன.

78 பேர் உயிரிழந்துள்ளமை இதுவரை உறுதியாகியுள்ளது.

750 பேர்வரை குறிப்பிட்ட மீன்பிடி படகில் பயணித்தனர் என ஊகங்கள் வெளியாகியுள்ளன. (4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நம்முடைய எண்ணங்களை நாம் மறைத்தாலும் நமது செயல்கள் அவற்றை அம்பலப்படுத்தி விடும். – மேர்ரி கிளாட்சன்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## காங்கேசன்துறை - காரைக்கால் கப்பல் சேவை நடக்குமா?

பலாலிக்கும் சென்னைக்குமான விமான சேவையை இழுத்தடிப்புச் செய்வதில் இலங்கை அரசாங்கம் தீவிரம் காட்டியது.

இருந்தும் இந்திய மத்திய அரசின் இறுக்கமான நிலைப்பாடு காரணமாக பலாலிக்கும் சென்னைக்குமான விமான சேவை ஆரம்பிக்கப்பட்டது.

இவ் விமான சேவை ஆரம்பிக்கப்பட்டதனால், வடபகுதி மக்கள் மிகுந்த நன்மை அடைந்துள்ளனர்.

எனினும் தென்பகுதிக்கு இஃது அவ்வளவு உடன்பாடல்ல.

பலாலியூடாகச் சென்னைக்கும் சென்னை ஊடாகப் பலாலிக்கும் இடையில் விமான சேவை நடப்பதன் காரணமாக வடபகுதி மக்களின் இந்தியப் பயணமும் வடபகுதிக்கு வருகின்ற புலம்பெயர் தமிழ் மக்களும் இந்திய நாட்டவர்களும் நேரடியாக யாழ்ப்பாணத்துக்கு வந்து போகின்றனர்.

இதனால் கொழும்பு கட்டுநாயக்க விமான சேவையை அண்மித்த வர்த்தகம் பாதிக்கப்பட்டுள்ளதான நிலைப்பாடுகள் உண்டு.

ஆக, பலாலி – சென்னை விமான சேவை தொடர்பில் தென்பகுதிக்குத் திருப்தி இல்லை என்பதை இங்கு வெளிப்படையாகக் கூறித்தானாக வேண்டும்.

இந்நிலையில் காங்கேசன்துறைக்கும் தமிழகத்திலுள்ள காரைக்காலுக்குமிடையில் பயணிகள் கப்பல் சேவையை ஆரம்பித்தால், அது வியாபாரத்துக்குப் பேராபத்து என தென்பகுதி வர்த்தகர்களும் நமது வர்த்தகர்களில் ஒரு பகுதியினரும் கருதுகின்றனர்.

அதாவது பயணிகள் கப்பல் சேவைக்கான போக்குவரத்துக் கட்டணங்கள் மிகக் குறைவாக இருப்பதுடன் ஒரு பயணி தன்னுடன் நூறு கிலோ எடையுள்ள பொருட்களைக் கொண்டுவரக்கூடிய வசதியும் அறிவிக்கப்பட்டுள்ளது.

இவ்வாறான வசதி இருக்கும்போது நுகர்வோர், கப்பல் மூலம் இந்தியாவுக்குச் சென்று தமக்குத் தேவையான புடைவைகள், பாத்திரங்கள், மின்சாதனங்கள் உள்ளிட்ட பொருட்களை எடுத்துவர முடியும்.

இதனால் கொழும்பு வர்த்தகம் கடும் பாதிப்பை அடையும் என்று கருதப்படுகிறது.

இதன் காரணமாகவே காங்கேசன்துறைக்கும் காரைக்காலுக்குமிடையிலான பயணிகள் கப்பல் போக்குவரத்து உடனடிச் சாத்தியமில்லை என போக்குவரத்து அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வா தெரிவித்துள்ளார்.

பயணிகள் கப்பல் சேவையை நடத்துவதற்குக் காங்கேசன்துறையில் போதிய துறைமுக வசதிகள் இல்லை என்பதால் அவற்றை அமைத்த பின்பே கப்பல் போக்குவரத்துச் சாத்தியமாகும் என்றும் அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வா கூறியுள்ளார்.

அமைச்சர் கூறுவது உண்மையாயின், எதற்காக கப்பல் சேவை 2023 ஜனவரியில் நடக்கும் 2023 ஏப்ரலில் ஆரம்பமாகும் என்றெல்லாம் அறிக்கைவிடப்பட்டதென்பதுதான் நம் தாழ்மையான கேள்வி.

ஆக, பயணிகள் கப்பல் போக்குவரத்து சேவை என்பது சாத்தியப்படாதென்று அனுமானிப்பதுதான் புத்திசாலித்தனம்.

# புத்தருடைய போதனைகளை மறந்து ரவுடித்தனம் செய்வது புத்த பிக்குகளே

## செல்வம் அடைக்கலநாதன் எம்.பி தெரிவிப்பு

(கொழும்பு)

புத்தருடைய போதனையை மறந்து இங்கு ரவுடித்தனம் செய்வது எல்லாம் புத்த பிக்குகள் தான் என வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரும், ரெலோ அமைப்பின் தலைவருமான செல்வம் அடைக்கலநாதன் தெரிவித்தார்.

வவுனியாவில் நேற்று இடம்பெற்ற நிகழ்வு ஒன்றின் பின் ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்த போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், குருந்தூர் மலை காணி விடயத்தில் தமிழ் தேசியக் கூட்டமைப்பினுடைய கூட்டங்களிலும் ஜனாதிபதி வவுனியா வந்த போதும் நாம் முன்வைத்த கோரிக்கையை ஏற்று 400 ஏக்கர் விவசாய நிலத்தை மக்களுக்கு பகிர்ந்தளிக்க வேண்டும் என அவர் உத்தரவிட்டிருந்தார்.

தற்போது பௌத்த பிக்குகள் எல்லா விடயங்களிலும் தலையிடுகிறார்கள். எங்களது பிரதேசத்தில் எங்களுக்கு சொந்தமான வயல்களை மக்களுக்கு வழங்க வேண்டும் என்று நாட்டின் ஜனாதிபதி உத்தரவிட்ட பின்பு பௌத்த பிக்குகள் இதற்கு எதிராக குரல் கொடுக்கிறார்கள்.

மூலைக்கு மூலை புத்த கோவில்களை கட்ட முனைகிறார்கள். அதை ஒரு பிரச்சினையாக தமிழ் மக்கள் மத்தியில் உருவாக்க முயல்கிறார்கள். இனப்பிரச்சினையில் கூட புத்த பிக்குகள் இனத்துவேசத்தைக்கக்குபவர்களாக தான் இருக்கிறார்கள்.

புத்தர் அந்தப் போதனையை செய்யவில்லை. ஆனால் இங்கு ரவுடித்தனம் செய்வதெல்லாம் புத்த பிக்குகள். என்னைப் பொறுத்தவரை இந்த காணி விடயத்தில் புத்த பிக்குகள்தலையிடக்கூடாது. ஜனாதிபதி உத்தரவிட்ட விடயம் நடைமுறைப்படுத்தப்பட வேண்டும். அது மக்களுக்கு வழங்கப்பட வேண்டும் அது தான் எமது கோரிக்கை. இந்த புத்த பிக்குகளின் குரல்களுக்கு எல்லாம் நாங்கள் பதில் சொல்வது எங்களை மலினப்படுத்தும் என்பது தான் எனது கருத்தாகும் எனத் தெரிவித்தார். (ம-7)

## நீர்வீழ்ச்சியில் விழுந்த மாணவன் மரணம்

பேராதனை பல்கலைக்கழக மாணவர் ஒருவர் பம்பரகந்த நீர்வீழ்ச்சியில் இருந்து தவறி விழுந்து உயிரிழந்துள்ளார்.

நேற்று காலை இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

ஐந்து பேர் கொண்ட குழுவொன்று உல்லாசப் பயணம் மேற்கொண்டிருந்த போது கால் வழுக்கி இந்த அனர்த்தம் இடம் பெற்றுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. பேராதனை பல்கலைக்கழகத்தில் 03 ஆம் ஆண்டில் கல்வி கற்கும் சசங்க விக்கும் விதாரண என்ற 25 வயதுடைய மாணவனே உயிரிழந்துள்ளார். (ம-7)

## சூப்பர் மார்க்கெட்டை உடைத்து பணம், பொருட்கள் திருட்டு

### கைதடியில் சம்பவம்

சாவகச்சேரிப் பொலிஸ் பிரிவிற்குட்பட்ட கைதடிச் சந்திக்கு அருகாமையில் அமைந்துள்ள சூப்பர் மார்க்கெட்டினை உடைத்து உள்நுழைந்த திருடர்கள் அங்கிருந்த பணம் மற்றும் பெறுமதியான பொருட்களை கொள்ளையிட்டுச் சென்றுள்ளனர்.

நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை இரவு சூப்பர் மார்க்கெட்டின் மேற்கூரை வழியாக உள்நுழைந்த திருடர்கள் மூன்று இலட்சம் ரூபாய் பணம், குளிர்பானவகைகள் மற்றும் பால் மாபைக்கற்றுகளை திருடிச் சென்றிருப்பதாக தெரிவிக்கப்படுகிறது.

மேற்படி திருட்டுக் காட்சி அங்கிருந்த பாதுகாப்புக் கமராவில் பதிவாகியுள்ள நிலையில் சாவகச்சேரிப் பொலிஸார் மேல்திக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (ம-7,30)

## பிக்குகளாக நியமிப்பதற்கான வயது வரம்பில் மாற்றம்

புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சு, மகாநாயக்க தேரர்களுடன் இணைந்து, இளம் பிள்ளைகளை பிக்குகளாக நியமிப்பதற்கான வயது வரம்பில் மாற்றத்தை ஏற்படுத்தவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது குறித்து புத்தசாசன அமைச்சர் விதுர விக்கிரமநாயக்க கருத்துத் தெரிவிக்கையில் பிக்குகளாக மாறிய பின்னர் குழந்தைகளுக்கான பெற்றோரின் கவனிப்பு மறுக்கப்படுவது அவர்களின் ஆளுமை வளர்ச்சி மற்றும் நல்வாழ்வில் தாக்கத்தை ஏற்படுத்துகின்றது.

இதனைக் கருத்திற்கொண்டே இம்முடிவை 'எடுக்க நாம் முன்வந்தோம்.

குழந்தை உரிமைகள் தொடர்பான சர்வதேச உடன்படிக்கைகளுக்கு இணங்க, அத்தகைய வயது வரம்பு அறிமுகப்படுத்தப்பட வேண்டும். அப்போதைய பிரதமர் சிறிமா பண்டாரநாயக்கவின் காலத்தில் வயது வரம்பு அவசியம் குறித்து பேசப்பட்டது. வயது வரம்பாக 12ஐ அறிமுகப்படுத்தவும் ஒப்புக்கொள்ளப்பட்டுள்ளதுஎன தெரிவித்துள்ளார். (ம-7)

## தொழு நோயாளர்கள் நாட்டில் அதிகரிப்பு

(கொழும்பு)

நாட்டில் கடந்த 5 மாதங்களில் சுமார் 600 தொழு நோயாளர்கள் பதிவாகியுள்ளதாக தொழுநோய் கட்டுப்பாட்டு மையம் தெரிவித்துள்ளது.

இவர்களில் அதிகமானோர் கொழும்பு மாவட்டத்தை சேர்ந்தவர்கள் என தொழுநோய் கட்டுப்பாட்டு மையத்தின் பதில் பணிப்பாளர் வைத்திய நிபுணர் பிரசாத் ரணவீர தெரிவித்துள்ளார்.

கொழும்பில் இதுவரையில் 100 தொழுநோயாளர்கள் பதிவாகியுள்ளதுடன், கம்பஹா மாவட்டத்தில் 66 நோயாளர்களும், மட்டக்களப்பில் 56 நோயாளர்களும், களுத்துறை மாவட்டத்தில் 47 நோயாளர்களும் பதிவாகியுள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார்.

தொழுநோய் என்று சந்தேகிக்கப்படும் ஒரு நபருக்கு, அறிகுறிகள் தென்பட்டால் அவரது புகைப்படத்தை 075 40 88 640 என்ற தொலைபேசி இலக்கத்துக்கு வட்ஸ்அப் செய்து தகவல் தெரிவிக்கலாம் எனவும் அவர்களது உடல் நிலை பாதிக்கப்பட்டிருப்பின் உரிய சிகிச்சைகள் வழங்கப்படும் எனவும் வைத்திய நிபுணர் பிரசாத் ரணவீர குறிப்பிட்டார். (ம-7)

## மாமாவின் தாக்குதலில் மருமகன் உயிரிழப்பு

(கொழும்பு)

மின்னேரிய பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட ரொட வெதி பிரதேசத்தில் நபரொருவர் மண்வெட்டியால் தாக்கி கொலை செய்யப்பட்டுள்ளார்.

உயிரிழந்தவர் 32 வயதுடைய மின்னேரிய ரொட வெதி பிரதேசத்தைச் சேர்ந்தவராவார்.

உயிரிழந்தவர் வெள்ளிக்கிழமை இரவு மதுபானம் அருந்தி விட்டு தனது மனைவியுடன் ஏற்பட்ட முரண்பாடு காரணமாக மனைவியின் தந்தை குறித்த நபரை மண்வெட்டியால் தாக்கியுள்ளதாக ஆரம்ப கட்ட விசாரணைகளில் இருந்து தெரியவந்துள்ளது.

சம்பவம் தொடர்பில் மின்னேரிய பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (ம-7)

## கிளிநொச்சியில் விபத்து ஒருவர் படுகாயம்

(கிளிநொச்சி)

கிளிநொச்சி - டிப்போ சந்தியில் இடம்பெற்ற விபத்தில் ஒருவர் படுகாயமடைந்துள்ளார்.

நேற்று மாலை 6 மணியளவில் நோயாளர் காவு வண்டியும் மோட்டார் சைக்கிளும் மோதுண்டு விபத்து சம்பவித்துள்ளது.

விபத்தில் மோட்டார் சைக்கிளில் பயணித்த நபர் படுகாயமடைந்த நிலையில் கிளிநொச்சி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகிறார்.

இவ் விபத்து தொடர்பாக கிளிநொச்சி பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ம-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கட்டுப்பாட்டு விலைக்கு அதிகமாக விற்ற வர்த்தகர்கள் மூவருக்கு அபராதம் விதிப்பு

(மன்னார்)

முட்டை மற்றும் அரிசியை கட்டுப்பாட்டு விலைக்கு அதிகமாக விற்பனை செய்த மூன்று வர்த்தக நிலைய உரிமையாளர்களுக்கு எதிராக தொடரப்பட்ட வழக்கில் மூவருக்கும் தலா ஒரு லட்சம் ரூபா அபராதம் மன்னார் நீதிமன்றத்தினால் விதிக்கப்பட்டுள்ளது.

மன்னார் நகரப் பகுதியில் தொடர்ச்சியாக பொருட்கள் கட்டுப்பாட்டு விலைக்கு அதிகமாக விற்பனை செய்யப்படுவதாக மன்னார் நுகர்வோர் அபிவிருத்தி அதிகார சபைக்கு கிடைக்கப் பெற்ற முறைப்பாடு தொடர்பில் நேற்று முன்தினம் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பின் போதே குறித்த மூன்று வர்த்தக நிலைய உரிமையாளர்கள் மீது வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது.

குறித்த வழக்கு நீதிமன்றத்தில் எடுத்து கொள்ளப்பட்ட நிலையிலேயே மன்னார் நீதிவான் நீதிமன்ற நீதிபதி குறித்த மூன்று வர்த்தக நிலைய உரிமையாளர்களுக்கும் தலா ஒரு லட்சம் அபராதம் விதித்திருந்தார்.

இந்த நிலையில் முட்டை 44 ரூபாய்க்கு அதிகமாகவும் கீரி சம்பா அரிசி 260 ரூபாய்க்கு அதிகமாக விற்பனை செய்யும் பட்சத்தில் மன்னார் நுகர்வோர் அதிகாரசபையிடம் முறையிடுமாறு நுகர்வோர் பாதுகாப்பு அதிகார சபையினர் கோரிக்கை விடுத்துள்ளனர். (4-6-285)

# இலவச மொழிக் கற்கை

(கிளிநொச்சி)

தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் கிளிநொச்சி மாவட்ட பயிற்சி நிலையத்தினால் இளைஞர், யுவதிகளின் மொழித் திறனை மேம்படுத்தும் வகையில் ஜூலை மாதம் இலவசமாக மொழிக்கற்கை மேற்கொள்ளப்பட்டவுள்ளது.

எனவே சிங்களம் மற்றும் ஜப்பான் மொழிக்கற்கையை கற்க விரும்பும் மாணவர்கள் நிலைய பொறுப்பதிகாரி, இளைஞர் பயிற்சி நிலையம், தேசிய இளைஞர் சேவைகள் மன்றம், 155 ஆவது மைல் கட்டடை, A-9 வீதி, கிளிநொச்சி எனும் முகவரிக்கு 2023.06.30 ஆம் திகதிக்கு முன்னதாக தங்கள் சுயவிபரக் கோவையை அனுப்பி வைக்க முடியும்.

அத்துடன் விரிவுரையாளர்களுக்கான வெற்றிடமும் காணப்படுவதனால் தேர்ச்சியுடையவர்கள் சுயவிபரக் கோவையுடன் தகுந்த சான்றிதழ்களையும் இணைத்து அனுப்பி வைக்க முடியும்.

மேலதிக தகவல்களுக்கு 021 228 5547, 077 358 9165 எனும் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளுமாறு உதவிப் பணிப்பாளர் அறிவித்துள்ளார். (4-6)



மனிதவலு மற்றும் வேலைவாய்ப்புத் திணைக்களமும் பச்சிலைப்பள்ளி பிரதேச செயலகமும் இணைந்து நடத்திய பச்சிலைப்பள்ளி பிரதேச மட்ட தொழிற்சந்தை நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை பச்சிலைப்பள்ளி பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் மனிதவலு மற்றும் வேலை வாய்ப்புத் திணைக்களத்தின் பிரதேச செயலக மனிதவள உத்தியோகத்தர் சிவராசா தலைமையில் இடம்பெற்றது.

(படம்-தேவானந்தன்)

# சான்றுப் பொருட்களை உரிமை கோரல்

(கண்டாவளை)

கிளிநொச்சி மாவட்ட நீதிமன்ற வழக்குகளுடன் தொடர்புடைய சான்றுப் பொருட்களாக கிளிநொச்சி பொலிஸ் அதிகாரியால் பாரப்படுத்தப்பட்டுள்ள பின்வரும் பொருட்களுக்கு உரிமை கோருபவர்கள் இருப்பின் உரிய ஆவணங்களுடன் பதிவாளரை தொடர்பு கொள்ளுமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

NP BGB 3313, NPJL - 6534, NPWD-6567, NPCC- 49, NPHR- 2462 , NPCD-5564, WPMQ - 0620,NPGI- 5854, MD2 DSPA ZZTWM 85062 ஆகிய மோட்டார் சைக்கிள்கள் தொடர்பில் உரிமை கோருபவர்கள் இருப்பின் நாளை திங்கட்கிழமைக்கு முன்னர் உரிய ஆவணங்களுடன் நீதிமன்றப் பதிவாளரை தொடர்பு கொள்ளுமாறு பதிவாளர் அறிவித்துள்ளார். (4-6-315)

# ஆனி மாத இராசி பலன்கள் 16.06.2023-16.07.2023

## மிதுனம்

**பார்த்ததுமே மற்றவர்களை எடைபோட்டு விடும் மிதுன இராசி வாசகர்களே!**

ஆனி மாதக் கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கும் பொழுது, உங்கள் இராசிநாதன் புதன் விரய ஸ்தானத்தில் தனாதிபதி சந்திரனோடு இணைந்திருக்கிறார். எனவே தன விரயம் ஏற்படும். அதேநேரத்தில் தொழில் ஸ்தானாதிபதி குரு லாபஸ்தானத்தில் இருப்பதால், வருமானம் திருப்திகரமாகவே இருக்கும். அதற்கேற்ப செலவு கூடும் வந்து கொண்டே இருக்கும். சேமிப்பிற்கான சாத்தியக்கூறுகள் இல்லையென்றே சொல்லலாம். அதேநேரத்தில் அடுத்தவருடைய உதவியை எதிர்பார்த்துக் காத்திருக்க வேண்டிய அவசியமும் இருக்காது. உடன்பிறப்புகளின் ஒத்துழைப்போடு முன்னேற்றம் காண்பீர்கள்.

**மிதுன - புதன்**

ஆனிமாதம் 3 ஆம் திகதி, உங்கள் இராசியான மிதுனத்திற்கு புதன் வருகிறார். இராசிநாதன் இராசியில் சஞ்சரிப்பது யோகமான நேரம் தான். பொருளாதாரத்தில் ஓரளவு நிறைவு ஏற்படும். புதிய முயற்சிகளில் வெற்றி கிடைக்கும். "புத ஆதித்ய யோகம்" செயற்படுவதால் கல்வி சம்பந்தமாக எடுத்த முயற்சிகளில் அனுகூலம் கிடைக்கும். ஒரு சிலருக்கு கடல் தாண்டிச் செல்லும் யோகம் வாய்க்கலாம். வாகனம் வாங்கி மகிழ்வீர்கள். உத்தியோகத்தில் நீங்கள் கேட்ட இடத்திற்கு மாறுதல் கிடைக்கும்.

**சிம்ம - செவ்வாய்**

ஆனி 17 ஆம் திகதி, சிம்ம இராசிக்கு செவ்வாய் செல்கிறார். அப்பொழுது குருவின் பார்வை செவ்வாய் மீது பதிகிறது. எனவே "குரு மங்கல யோகம்" ஏற்படுகிறது. இதனால் கல்யாணக் கனவுகள் நனவாகும். கடமையில் இருந்த தொய்வு அகலும். அதேநேரத்தில் குருவின் பார்வை பதிந்த செவ்வாயின் பார்வை, சனி மீது விழுவதால் பெற்றோருடன் இணக்கமான சூழல் ஏற்படும். சொத்துப் பங்கீடுகள் சுலபமாக முடியும். சவாலான காரியங்களைக்கூட சாதாரணமாக முடித்துக்காட்டி பாராட்டுக்களைப் பெறுவீர்கள். வெளியூர் பயணங்கள் நன்மை தரும் விதம் அமையும்.

**சிம்ம - சுக்கிரன்**

ஆனி 18 ஆம் திகதி, சிம்ம இராசிக்கு சுக்கிரன் வருகிறார். உங்கள் இராசிக்கு பஞ்சம - விரயாதிபதியான சுக்கிரன், சிம்மத்திற்கு செல்வது யோகம் தான். இருப்பினும் உடன்பிறப்புகளின் வழியில் ஒருசில பிரச்சினைகளும் விரயங்களும் ஏற்படலாம். பிள்ளைகளின் கல்யாணம் சம்பந்தமாக எடுத்த முயற்சி கைகூடும். வெளிநாட்டு வணிகம் லாபம் தரும். உத்தியோகஸ்தர்கள் சிலருக்கு வெளிநாட்டு நிறுவனங்களில் இருந்து பணிபுரிய அழைப்புகள் வரலாம். தொழில் கூட்டாளிகளின் கருத்து வேறுபாடுகள் அகலும். நிதி நிறுவனங்களில் ஏற்பட்ட பிரச்சினை நல்ல முடிவிற்கு வரும்.

**கடக - புதன்**

ஆனி 19 ஆம் திகதி, கடக இராசிக்கு புதன் செல்கிறார். உங்கள் இராசிக்கு அதிபதியான புதன் தன ஸ்தானத்திற்கு செல்வது யோகம் தான். தொழிலில் எதிர்பார்த்த லாபம் உண்டு. நினைத்தது நிறைவேறும். வருமானப் பற்றாக்குறை அகலும். வசதி வாய்ப்புகளை பெருக்கிக் கொள்ள முன்வருவீர்கள். ஆடம்பரச் செலவுகள் அதிகரித்தாலும் அதற்கேற்ப வருமானம் வந்து சேரும். இல்லம் கட்டிக் குடியேறுவது அல்லது கட்டிய வீட்டைப் பராமரிப்பது போன்றவற்றில் கவனம் செலுத்துவீர்கள். அதிகார வர்க்கத்தினரின் ஆதரவு கிடைக்கும். பொதுவாழ்வில் உள்ளவர்களுக்கு எதிர்கால முன்னேற்றம் கருதி எடுத்த முயற்சியில் வெற்றி உண்டு.

தொழில், வியாபாரம் செய்பவர்கள் புதிய முதலீடுகளைச் செய்து விருத்தியடைய முன்வருவர். உத்தியோகத்தில் உள்ளவர்கள் மேலதிகாரிகளின் கெடுபிடிகளை சமாளித்து முன்னேற்றம் காண்பர். கலைஞர்களுக்கு நிதி உதவி கிடைக்கும். மாணவ- மாணவிகளுக்கு கட்டுப்பாடுடன் கூடிய கல்வியில் நாட்டம் செல்லும். பெண்களுக்கு உடல் நலனில் அக்கறை தேவை. கட்டுங்கடங்காத செலவுகளால் கவலைகள் அதிகரிக்கும். கணவன் மனைவிக்குள் அனுசரித்துச் செல்வது நல்லது.

## கடகம்

**நட்பிற்கு முக்கியத்துவம் கொடுக்கும் கடக இராசி வாசகர்களே!**

ஆனி மாதக் கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கும் பொழுது, மாதத் தொடக்கத்தில் செவ்வாய் உங்கள் இராசியிலேயே நீசம்பெற்று சஞ்சரிக்கிறார். ஆனி 17ஆம் திகதிக்கு மேல் சிம்மத்திற்கு செல்கிறார். மாதத் தொடக்கத்தில் வலிமை செய்யும் கிரகம் வலிமை இழந்திருப்பதால் மனநிம்மதிக் குறைவு உருவாகும். சுக ஸ்தானத்தில் கேது இருப்பதாலும் மாதம் முழுவதும் செவ்வாயின் பார்வை சனியின் மீது பதிவதாலும் உடல்நலத்தில் கவனம் தேவை.

**மிதுன - புதன்**

ஆனி 3 ஆம் திகதி, மிதுன இராசிக்கு புதன் செல்கிறார். உங்கள் இராசிக்கு விரயாதிபதியான புதன், விரய ஸ்தானத்தில் தனாதிபதி சூரியனோடு இணைவதால் தன விரயங்கள் அதிகரிக்கும். திட்டமிட்ட காரியங்களை திட்டமிட்டபடி செய்ய பெரும் பிரயாசை எடுக்கும் சூழ்நிலை உருவாகும். பயணங்கள் அதிகரிக்கும். பழைய வாகனத்தை கொடுத்து விட்டு புதிய வாகனம் வாங்கும் முயற்சியில் ஆர்வம் காட்டுவீர்கள். கல்வி சம்பந்தமாக எடுத்த முயற்சி கைகூடும். என்றாலும் நினைத்த துறை கிடைக்காமல் வேறு துறை கிடைக்கலாம்.

**சிம்ம - செவ்வாய்**

ஆனி 17 ஆம் திகதி, சிம்ம இராசிக்கு செவ்வாய் செல்கிறார். குருவின் பார்வை செவ்வாய் மீது பதிவதால் "குரு மங்கல யோகம்" ஏற்படுகிறது. உடன்பிறப்புகள் வழியில் சுபசெய்திகள் வந்துசேரும். குருவின் பார்வை பதிந்த செவ்வாயின் பார்வை, சனியின் மீது விழுகிறது. எனவே கடுமையான சூழ்நிலை கொஞ்சம் மாறும். கொடுக்கல் - வாங்கல்களில் சரளமான நிலை உருவாகும். உத்தியோகத்தில் பதவி உயர்வு உண்டு.

**சிம்ம - சுக்கிரன்**

ஆனி 18 ஆம் திகதி, சிம்ம இராசிக்கு சுக்கிரன் வருகிறார். உங்கள் இராசிக்கு சுக- லாபாதிபதியான சுக்கிரன், தன ஸ்தானத்திற்கு வருவது யோகம் தான். குடும்ப முன்னேற்றம் கூடும். தொழிலில் கூடுதல் லாபம் கிடைக்கும். கடுமையாக முயற்சித்தும் நடைபெறாத காரியங்கள் இப்பொழுது துரிதமாக நடைபெறும். ஆடை, ஆபரண சேர்க்கை உண்டு. சிம்மத்தில் உள்ள செவ்வாயின் மீது குருவின் பார்வை பதிவதால், உத்தியோகத்தில் பதவி உயர்வு, சம்பள உயர்வுடன் கூடிய இடமாற்றம் வரலாம்.

**கடக - புதன்**

ஆனி 19 ஆம் திகதி, கடக இராசிக்கு புதன் வருகிறார். உங்கள் இராசிக்கு 3, 12 ஆகிய இடங்களுக்கு அதிபதியான புதன், சொந்த வீட்டிலேயே சஞ்சரிப்பதால் சகோதர உறவு பலப்படும். வழக்குகள் சாதகமாக முடியும்.

வருங்கால நலன் கருதி நீங்கள் எடுத்த முயற்சியில் வெற்றி கிடைக்கும். ஒரு சிலருக்கு தூர தேசப் பயணங்கள் கைகூடும். புனிதப் பயணங்களை மேற்கொள்வீர்கள். அண்ணன்-தம்பிகளுக்குள் இருந்த அரசல் புரசல்கள் மாறும்.

உத்தியோகத்தில் நீண்டநாட்களாக எதிர்பார்த்த சலுகைகள் கிடைக்கும். பணிநீக்கம் செய்யப்பட்டவர்கள் மீண்டும் பணியில் சேர வாய்ப்பு உருவாகும். பொதுவாழ்வில் உள்ளவர்களுக்கு புதிய பொறுப்புகளும் அதனால் பிரபலமாகும் யோகமும் உண்டு. வியாபாரம், தொழில் செய்பவர்களுக்கு எதிர்பார்த்த உதவி கிடைக்கும்.

உத்தியோகத்தில் உள்ளவர்களுக்கு சகப் பணியாளர்களால் நன்மை உண்டு. உயர் அதிகாரிகளால் மதிக்கப்படுவீர்கள். கலைஞர்களுக்கு புதிய நிறுவனங்களில் இருந்து அழைப்புகள் வரலாம். மாணவ- மாணவிகள், தங்களுடன் பயிலும் சக மாணவர்களிடம் பழகும் கவனம் தேவை.

பெண்களுக்கு மனம் மகிழும் காரியங்கள் நடைபெறும். ஆன்மிக நாட்டம் அதிகரிக்கும். பிள்ளைகளின் எதிர்கால நலனில் அக்கறை செலுத்துவீர்கள். (தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கோதுமை...

அண்மையில் 160 ரூபாயாக இருந்த இறக்குமதி செய்யப்பட்ட ஒரு கிலோ கோதுமை மாவின் மொத்த விலை 200 ரூபாயாக அதிகரித்துள்ளதாக பேக்கரி உரிமையாளர் சங்கம் தெரிவித்துள்ளது.

40 ரூபாய் வரியின் கீழ் கோதுமை மாவை இறக்குமதி செய்யக் கூடியவர்கள் இரத்துச் செய்து உரிமம் பெற வேண்டும் என நிதியமைச்சு உத்தரவு பிறப்பித்ததையடுத்து இறக்குமதி செய்யப்படும் கோதுமை மாவின் மொத்த விலை அதிகரித்துள்ளது. (ம-7)

## முல்லை கைவேலி...

இதில் அதே பகுதியைச் சேர்ந்த 24 வயது இளைஞனே உயிரிழந்தவராவார்.

இளைஞன் உயிரை மாய்ப்பதற்கு முன்பாக கடிதமொன்றை எழுதி வைத்துள்ளார். அதில் கடன் தொல்லையால் உயிரை மாய்ப்பதாக குறிப்பிட்டுள்ளார்.

இளைஞனின் சடலம் புதுக்குடியிருப்பு ஆதார வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (ம-7)

## மன்னாரில்...

லாளர் பிரிவில் உள்ள அச்சங்குளம் கிராமத்தில் நேற்று சனிக்கிழமை இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது.

இரண்டு குழுக்களுக்கிடையில் ஏற்பட்ட வாய்த்தர்க்கம் முற்றி கைகலப்பாக மாறிய நிலையில் ஒரு குழுவை சேர்ந்தவர்கள் மற்றைய குழு நபர் மீது கூரிய ஆயுதத்தினால் தலையில் தாக்கியுள்ளனர்.

இதன்போது படுகாயமடைந்த குறித்த இளம் குடும்பஸ்தர் நானாட்டான் பிரதேச வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட நிலையில் உயிரிழந்துள்ளார்.

மரணித்தவர் அச்சங்குளம் கிராமத்தில் வசிக்கும் 25 வயதுடைய ஒரு குழந்தையின் தந்தை என தெரிய வருகிறது. உயிரிழந்தவரின் சடலம் நானாட்டான் பிரதேச வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது.

சம்பவ இடத்திற்கு சென்ற முருங்கன் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ம-7,285)

## ஆலய வீதியில்...

நிலையில் ஆலய வீதியில் நேற்று மூன்று நாகங்கள் வலம் வந்து காட்சி கொடுத்தன. (ம-7)

## நாய்களுக்கு...

தனை, கினிகத்தேன மற்றும் ஹட்டன் ஆகிய பிரதேசங்களிலும் இந்நோய் பரவி வருகின்றது.

இம் மாவட்டங்களில் எட்டு மாதங்களுக்கும் குறைவான நாய்க் குட்டிகளுக்கு இத்தொற்று கண்டறியப்பட்டது.

பாதிக்கப்பட்ட குட்டிகள் சுவாசக் கோளாறுகள் (சுவாசப் பிரச்சினைகள்), வாந்தி, வயிற்றுப்போக்கு, ஈறுகளின் நிறமாற்றம், பசியின்மை மற்றும் சோம்பல் ஆகியவற்றால் பாதிக்கப்பட்டுள்ளன

குறிப்பாக ஜெர்மன் ஷெப்பர்ட்ஸ் மற்றும் லாப்ரடோர் போன்ற கலப்பு இன நாய்களிடையே இத்தொற்று பரவுவது கண்டறியப்பட்டுள்ளது.

எனவே நாய் வளர்ப்பவர்கள் நாய்க் குட்டிகளுக்கு உறைந்த உணவுகளை ஊட்டுவதைத் தவிர்க்குமாறும் 4 அல்லது 5 மாதங்களுக்கு குளிப்பாட்டுவதைத் தவிர்க்குமாறும்" வைத்தியர் சாகரதிலக்க வேண்டுகோள் விடுத்துள்ளார். (ம-7)

## அதிகளவான...

அரசியல் கருத்துப்பரிமாறல் நிகழ்வில் கலந்துகொண்டவேளை அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

உங்களது தந்தை தனிச்சிங்கள சட்டத்தை கொண்டு வந்திருக்காவிட்டால் நாடு தற்போது மிகவும் முன்னேற்றகரமான நிலையில் இருந்திருக்கும். இதனை பற்றி நீங்கள் என்ன நினைக்கின்றீர்கள்? என ஒருவர் எழுப்பிய கேள்விக்கு பதிலளிக்கையில் சுனேத்திரா பண்டாரநாயக்க இதனைத் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், சந்தர்ப்பவாத அரசியலுக்காக எனது தந்தை சிங்கள சட்டத்தை கொண்டு வந்திருக்கலாம். இது எனக்கு ஆழ்ந்த கவலையை [illegible] சுனேத்திரா தெரிவித்தார். (ம-7)

## மகாநாயக்கர்...

வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் உள்ள தொல்பொருள் மரபுரிமைகளுக்கு பாதிப்பு ஏற்படாத சிறந்த தீர்மானத்தை எடுக்குமாறு ஜனாதிபதியிடம் வலியுறுத்தியுள்ளோம். அரசியல் இலாபத்தை கருத்தில் கொண்டு தொல்பொருள் விவகாரத்தில் தீர்மானம் எடுக்க இடமளிக்க முடியாது.

பௌத்த மதத்தைப் பாதுகாக்கும் பொறுப்பு அரசியலமைப்பால் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. ஆகவே அந்த பொறுப்பில் இருந்து எவரும் விலக முடியாது.

வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் உள்ள தொல்பொருள் சின்னங்களை முன்னிலைப்படுத்தி ஒரு தரப்பினர் அரசியல் செய்கிறார்கள். சாதாரண மக்கள் தொல்பொருள் மரபுரிமைகளுக்கு எதிர்ப்பு தெரிவிக்காதபோதும் வடக்கு மற்றும் கிழக்கு மாகாண அரசியல்வாதிகள் மக்களை தவறாக வழி நடத்துகிறார்கள்.

குறுகிய அரசியல் இலாபத்தை முன்னிலைப்படுத்தி தொல்பொருள் விவகாரத்தில் தீர்மானம் எடுக்க இடமளிக்க முடியாது. குருந்தூர்மலை விவகாரத்தை அரசியலாக்க வேண்டாம் என்பதை வடக்கு மற்றும் கிழக்கு மாகாண அரசியல் கட்சிகளிடம் வலியுறுத்துகிறோம்.

குருந்தூர மலை விவகாரத்தில் மகாநாயக்க தேரர்களின் ஆலோசனைகளுக்கு அமைய செயற்படுவது அத்தியாவசியமானது. அரச நிறுவனங்களை மறுசீரமைக்கும் அரசாங்கத்தின் தீர்மானம் குறித்து விசேட கவனம் செலுத்தியுள்ளோம்.

இவ்விடயம் தொடர்பில் சகல தொழிற்சங்கங்களுடன் எதிர்வரும் நாட்களில் பேச்சுவார்த்தையில் ஈடுபடவுள்ளோம் என்றார். (ம-7)

## இலங்...

பிரிவின் பேராசிரியர் வசந்த அத்துகோரள தெரிவித்தார்.

கணக்கெடுப்புத் தரவுகளின்படி, கடந்த வருடம் இலங்கையில் ஒரு குடும்பத்தின் மாதாந்தச் செலவு சுமார் 63,820 ரூபாயாகும் என அவர் கூறினார்.

இலங்கை குடும்பம் ஒன்றின் மாதாந்த செலவில் 53 வீதம் அதாவது 40,632 ரூபாய் உணவுக்காக செலவிடப்பட வேண்டியுள்ளது. மீதமுள்ள 35,492 ரூபாய் (மொத்த செலவில் 47 சதவீதம்) உணவு அல்லாத தேவைகளுக்காக செலவிடப்படுகிறது என்று பேராசிரியர் கூறினார்.

இதேவேளை, இலங்கையில் 60 வீதமான குடும்பங்களின் மாதாந்த வருமானம் 2022ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் இவ்வருடம் குறைந்துள்ளதாக அத்துகோரள தெரிவித்தார். (ம-7)

## பொருளாதாரத்...

இலங்கைத் தூதுவர் மிலிந்த மொராகொட தெரிவித்துள்ளார்.

இலங்கை தனது வெளிநாட்டுக் கடன்களை செலுத்துவதை இடைநிறுத்தியுள்ளது, பல பொருட்களை இறக்குமதி செய்வதை இடைநிறுத்தியுள்ளது, இவை இலங்கை செய்துள்ள உடன்படிக்கைகளிற்கு எதிரானது. குறிப்பாக இலங்கை சர்வதேச நாணயநிதியத்துடன் உடன்படிக்கை செய்துகொண்டுள்ளதாலேயே உலக நாடுகள் இதற்கு இணங்கியுள்ளன என அவர் சுட்டிக்காட்டியுள்ளார். (ம-7)


ஜாதிக சம்பத
சீட்டிழுப்பு திகதி 17/06/2023
சீட்டிழுப்பு இலக்கம் 1603
வெற்றி இலக்கங்கள்
சிம்மம் 0 4 1 6 5 9
தேசிய லொத்தர் சபை

தன நிதானய
திகதி -2023.06.17
சீட்டிழுப்பு இலக்கம் - 1178
H 07 39 50 68
ஆங்கில எழுத்து வெற்றி இலக்கங்கள்

கொவிசெத
திகதி 2023.06.17
சீட்டிழுப்பு இலக்கம் 3390
ஆங்கில எழுத்து வெற்றி இலக்கங்கள்
H 01 06 20 65
தேசிய லொத்தர் சபை

மெகா பவர்
திகதி 17/06/2023
சீட்டிழுப்பு இலக்கம் 1496
Q 18 15 44 50 55

HANDAHANA
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு திகதி 2023.06.17
சீட்டிழுப்பு இலக்கம் 457
கடகம் 25 34 37 52 கடகம்
தேசிய லொத்தர் சபை

மஹஜன சம்பத
திகதி 2023/06/17
சீட்டிழுப்பு இலக்கம் 5148
0 3 0 9 8 7 3
தேசிய லொத்தர் சபை

SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 2122
நிறம் கடும் நீலம்
சீட்டிழுப்பு திகதி 2023.06.17
தினம் சனிக்கிழமை
I 26 41 55 72
வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை ரூ. 3,914,760/-
DLB www.dlb.lk

சனிதா
சனிக்கிழமை
சீட்டிழுப்பு திகதி 2023.06.17
வெற்றி வாரம் 4283
வர்ணம் இளம் பச்சை
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 50,807,758.20
வெற்றி இலக்கங்கள் 08 31 55 71 A
DLB

ராசி
சுப்பர் ஜக்பொட் ரூ. 3,583,026.20
திகதி 2023-06-17
வெற்றி வாரம் 3834
வர்ணம் இள நீலம்
வெற்றி இலக்கங்கள் 06 18 22 62 மீனம்
வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை ரூ. 9,993,560/-
DLB

ஆங்கில எழுத்து, சுப்பர் இலக்கம் மற்றும் வெற்றி இலக்கம்
M 17 24 37 40 61
சீட்டிழுப்பு வாரம் 1298
சிவப்பு
2023.06.17 சனிக்கிழமை
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 338,602,770.60
DLB தொலை பேசி 0112 333 546/7

சசிரிகா வாசனாவ
உத்தியோகபூர்வ முடிவுகள்
வெற்றி வாரம் 603 திகதி 2023-06-17 வர்ணம் ஆரஞ்சு நிறம்
ஆங்கில எழுத்து D வெற்றி இலக்கங்கள் 08 35 46 விதி எண் 04
எதிர்வரும் சுப்பர் பரிசுப்பொதி ரூ. 20,861,032.00
DLB DEVELOPMENT LOTTERIES தொ. பே.: 0112 333 546/47 Web: www.dlb.lk

அட கோடீபதி ADA KOTIPATHI
சனிக்கிழமை
வெற்றி வாரம்: 1948
வர்ணம்: மஞ்சள்
சீட்டிழுப்பு திகதி: 2023.06.17
வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை ரூ. 52,563,421.40/-
வெற்றி இலக்கங்கள் 52 65 72 73 M
DLB


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

## IELTS CLASSES

கொழும்பு பல்கலைக்கழக ஆசிரியரினால்
IELTS, A1UK EXAM, ADVANCED GRAMMAR & SPOKEN ENGLISH

- GUARANTEED TO 7.5 in IELTS Exam.
- PASS in UK A1 Exam.
- Exam REGISTRATION CENTER.

(15768)

(வாழ்க்கைத் துணையுடன் இணைவதற்கான பரீட்சை) A1 UK Exam, IELTS } புதிய பிரிவுகள் ஆரம்பம்

OXFORD ENGLISH ACADEMY, Ariyakulam Junction, Jaffna.

T.P : 077 780 3970, 074 007 1970

## வேலைவாய்ப்பு

மீசாலையில் இயங்கும் மருந்தகத்திற்கு மருந்தக உதவியாளர் தேவை.
மருந்து தொடர்பான முன் அனுபவம் இருப்பவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.



தொடர்புகளுக்கு
077 711 0329
077 245 4224

(15989)

CCTV கமராக்கள் பொருத்துதல், பழுதுபார்த்தல், பராமரிப்பு வேலைகள் உத்தரவாதத்துடன் செய்து தரப்படும்.

V vision security solutions

(16001)

077 998 6772

## வேலைவாய்ப்பு

Zenzpot

யாழில் தரமான கைவினைப் பொருட்களை உற்பத்தி செய்து ஏற்றுமதி செய்கின்ற Zenzpot தனியார் நிறுவனத்தில் இளையோருக்கான வேலைவாய்ப்பு

- Paper & Ribbon Crafts Makers (பெண்)
- Social Media Manager (ஆண்/பெண்)
- Graphic Designer (ஆண்/பெண்)

- வயது எல்லை 18 - 40
- முன்அனுபவம் உள்ளவர்களுக்கு முன்னுரிமை



76, Arasadi Road,
Jaffna. (யாழ்.இந்து மகளிர் கல்லூரிக்கு அருகாமையில்)

தொடர்புகளுக்கு:
077 558 1004,
076 076 4565

(15984)

## மணமகள் தேவை

1981 ஆம் ஆண்டு பிறந்தவரும் லண்டனில் வசிப்பவரும் (PR) லண்டனிலும் படித்தவர் இவருக்கு நன்றாக படித்த மணமகளை தேடுகின்றோம்.

(15994)

077 668 3717

## வாகனம் விற்பனைக்கு

Toyota prius, first owner
2013 இல் பதிவு செய்யப்பட்டதும்
(Pearl white) கார் ஒன்று
விற்பனைக்கு உண்டு.
விலை 6500,000/=

(C-6761)

077 108 3481

## பௌதிகவியல் வகுப்பு

சனி, ஞாயிறு தினங்களில்
25 Batch ஆரம்பமாகின்றது
23,24 Batch வகுப்புகளுக்கும்
தொடர்பு கொள்ள :
077 600 4896

(15911)

Y.M.C.A தம்பசிட்டி
159/1, 2nd cross st, Jaffna.

## மணமகள் தேவை

இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த 37 வயதுடைய தனியார் துறையில் உயர் பதவி வகிக்கும் 7 இல் செவ்வாய் உடைய மணமகனிற்கு உயர் தகைமையுடைய மணமகள் தேவை.
மணமகனின் கிரக பாவம் 46.
பெற்றோர் மட்டும் தொடர்பு கொள்ளவும்.
தரகர் தவிர்க்கப்படுகின்றது. (16008)

076 292 1169

## பற்சிகிச்சை

நிரந்தர பல்கட்டுதல் (implant), 'கிளிப்' போடுதல் மற்றும் அனைத்து நவீன சிகிச்சைகளும்
கம்சியா
பற்சிகிச்சைப் பிரிவில்
(யாழ்.ஆஸ்பத்திரிக்கு முன்பாக, BOC வங்கிக்கு அருகில்) நடைபெறுகிறது.
578/1, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

(C-6712)

077 375 4490
077 220 2769

## உடனடி வேலைவாய்ப்பு

### சமையல் உதவியாளர்கள்

வல்வெட்டித்துறையில் இயங்கும் உணவகத்திற்கு தங்கியிருந்து சமையல் செய்யக்கூடியவர்கள் தேவை.

- முன்அனுபவம் விரும்பத்தக்கது.
- ஆர்வம் உள்ளவர்களும் விண்ணப்பிக்கலாம்.




சம்பளம்: 50,000

(C-6768)

CIMS 49A, CHAPEL STREET, JAFFNA
777-068-777

## விண்ணக வாழ்வில் ஓராண்டு

# நினைவலைகள்

தோற்றம் 1934 . 10 . 29

மறைவு 2022 . 06 . 29



அமரர் இராமலிங்கம் நல்லம்மா

திதி : 18.06.2023 பூர்வபக்க பிரதமை

கண்முன்னே வாழ்ந்த காலம்
கனவாகிப் போனாலும்
எம்முன்னே உங்கள் பாசம்
எந்நாளும் உயிர்வாழும்
மண்விட்டு மறைந்த நீங்கள்
ஓராண்டு சென்றாலும்
எம் நெஞ்சில் இருப்பீர்கள்
எந்நாளும் நினைவாக

520, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

(15991)

கணவர், பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்

# தீபம் - யாழ் நகர்

## வர்த்தகப் பிரிவு A/L 2025

ஆரம்பம் :- 18.06.2023 ஞாயிறு மாலை 3 மணி

| | |
|---|---|
| பொருளியல் | M. லிஜிதன் |
| கணக்கீடு | V. தமிழ்ஈசன் |
| வணிகக்கல்வி | B. கோபிதன் |

அனுமதிகள் வழங்கப்படுகின்றது
தொடர்புகளுக்கு...
077 2247781

(16006)

## காணி விற்பனைக்கு

**யாழ்ப்பாணம் புத்தூரில் 33 பரப்பு காணி விற்பனைக்கு உண்டு.**

- பருத்தித்துறை வீதி புத்தூர் சந்தியில் இருந்து சாவகச்சேரி செல்லும் பிரதான காபற் வீதி முகப்புடன்
- புத்தூர் தண்ணீர் தாங்கி அருகாமை(நிலப்பரப்பு)
- மூன்று பரப்பாகவும் இரண்டரைப் பரப்பாகவும் பிரிக்கப்பட்ட நிலையில்
- வியாபார நிலையங்கள், திருமண மண்டபங்கள், வீடு அமைப்பதற்கு உகந்த இடம்
- ஒரு பரப்பின் விலை இரண்டு இலட்சத்து ஐம்பதாயிரம் ரூபாய் மட்டும்.
- பார்வையிடும் நேரம் காலை 6 மணிமுதல் மாலை 6 மணிவரை
- நன்னீர் ஊற்று.

(15974)

076 733 6047
076 755 8606


இப்பத்திரிகை வலம்புரி நியூஸ் பேப்பர் (பிறைவேற்) லிமிட்ரெட் ஸ்தாபனத்தாரால் இல.191, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 18.06.2023 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org